2.7.4

# மன்னார் மறை சாட்சிகள்




ஞானமுத்து பிலேந்திரன்

# மன்னார் மறை சாட்சிகள்

ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன்
B.Th. (Rome), M.Phil. (Jaffna), Ph.D. (Jaffna)
முதுநிலை விரிவுரையாளர்
தலைவர்/கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம
2009.

## பதிப்பு விபரம்


நூல் : மன்னார் மறை சாட்சிகள்.

ஆக்கம் : அருட்பணி ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன்

முதற்பதிப்பு : 1st ஒக்டோபர் 2008.

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

விலை : ரூபா 40.00

அச்சகம் : ஜே. எஸ். அச்சகம்

Title : *Mannar Marai Saatchikal*

Author : Rev. Fr. Gnanamuthu Victor Pilendran

First Published: 1st oct. 2008

Copyright : Author

Printing : J.S.Priters.

ISBN : 978-955-96653-2-8

Publishers : Bishop's House, Jaffna.


Cover

The Church and Church House at Changane

*From Phillipus Baldaeus'*

*Description of the Island of Ceylon, 1672.*

# மன்னார் மறை சாட்சிகள்

## முன்னுரை

மன்னார் மறை சாட்சிகள்[1] பற்றி மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு ஆய்வும், முழுமையான ஆய்வாக அமைய பிரான்சிஸ் சவேரியார் இச்சம்பவம் தொடர்பாக ஆற்றிய பங்களிப்பும், இந்நிகழ்வுகள் தொடர்பாக அவர் எழுதிய மடல்கள் பற்றிய அறிவும், மிக அடிப்படையானவையாகும். இவ் ஆய்வு பற்றி போதிய விளக்கம் பெறுவதற்கு முத்துக்குளித்துறையில் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியும், பரம்பலும் பற்றிய பின்னணி அறிவு பெரும் துணையாக அமையும். முத்துக்குளித்துறை என்பது கன்னியாங்குமரி முதல் இராமேஸ்வரம் வரையும் உள்ளடங்கிய பகுதியையும், மன்னார்க்கரையையும் குறித்து நிற்கின்றது.[2]

## தென் இந்தியாவில் கத்தோலிக்கம்

பிரான்சிஸ் சவேரியார் இந்தியா வருவதற்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பே டிசம்பர் மாதம் 1535 இல் 85 பரவ குலத்தலைவர்கள் கோவா மறை மாவட்டத்தின் தலைமைக்குரு மிக்கேல் வாஸ் என்பவரால் கொச்சியில் திருமுழுக்கு அளிக்கப்பட்டு திருச்சபையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். மேலும் சித்திரை மாதம் 1536ஆம் ஆண்டு முத்துக்குளிப்பதற்கு தூத்துக்குடியில் முகாம் இட்டிருந்த வேளையில் பரவகுலத்து ஆண்கள் எல்லோரும் திருமுழுக்குப் பெற்றனர். அதே ஆண்டு மே மாதத்தில் இதே குலத்துப் பெண்களும், குழந்தைகளும் தங்கள் கிராமங்களிலே திருமுழுக்குப் பெற்றனர். கோவா குரு முதல்வர் யுவான் டீ குரூஸ் பரவர்களுக்கு திருமுழுக்கு வழங்குவதில் ஆர்வமாயிருந்து மேலும் ஐந்து குருமாரை முத்துக்குளித்துறைக்கு அனுப்பியதால் மிக்கேல் வாஸ் அடிகள் தலைமையில் 30கிராமங்களைச் சேர்ந்த 20,000 பரவர்களுக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டது.[3]

பரவர்கள் மதமாற்றம் பற்றி அறிந்த போர்த்துக்கால் மன்னன் 3ஆம் யுவான், "பத்துருவாதோ"[4] கடமை உணர்வினால் உந்தப்பட்டு இப்புதிய மறைபரப்புத்தளத்தில் பணியாற்ற உரோமையில் தனது தூதுவராகப்பணியாற்றிய பெத்ரோ மஸ்கரஞாஸ் என்பவர் வழியாக இயேசு சபை நிறுவினர் புனித இஞ்ஞாசியாரிடம்[5] உதவி கோரினார்.[6] முத்துக்குளியந்துறையில் பணியாற்ற இயேசு சபைக் குருமாரைத் தந்துதவும் படி போர்த்துக்கால் மன்னன் விடுத்த அழைப்பை இஞ்ஞாசியார் ஏற்று இச்சபை புதிதாக ஆரம்பிக்கப்பட்டு ஏழு உறுப்பினர்களை மட்டும் கொண்டிருந்தாலும் பிரான்சிஸ் சவேரியார்[7] அடிகளையும், அருட்சகோதரர் மன்சிலாஸ்[8] என்பவரையும் முத்துக்குளித்துறைக்கு அனுப்பிவைத்தார். பிரான்சிஸ் சவேரியாரே இந்தியாவிற்கு வருகை தந்த முதல் இயேசு சபைக் குருவாகும். மேலும் பரவ குலத்தவர்களே முதன் முதலாகக் கத்தோலிக்கத்தைத் தழுவிக் கொண்ட தமிழர்களாவர். சவேரியாரின் வருகைக்கு ஏழு வருடங்களுக்கு முன்பே பரவர்கள் திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் இணைந்து கொண்டாலும் ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் கிறிஸ்தவத்தை முத்துக்குளித்துறை, மலாக்கா, யப்பான், ஆகிய இடங்கள் உட்பட வேறு இடங்களிலும் பரப்பியவர் பிரான்சிஸ் சவேரியாராகும்.

## புனித பிரான்சிஸ் சவேரியார்

பிரான்சிஸ் சவேரியார் சித்திரை மாதம் 7ஆம் திகதி 1506ஆம் ஆண்டு ஸ்பானியா நாட்டில் பிறந்து, பரீஸ் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றார். 1504 இல் இஞ்ஞாசியாருடன் இணைந்து இயேசு சபையை நிறுவினார். யூன் மாதம் 24ஆம் திகதி 1537ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு போத்துக்கால் மன்னன் 3ஆம் யுவான் என்பவனின் வேண்டுகோளுக்கிணங்க முத்துக்குளித்துறையில் பணியாற்ற மே மாதம் 6ஆம் திகதி 1542ஆம் ஆண்டு கோவா மானிலத்தை அடைந்தார். ஆறு மாதங்கள் கோவா மாநிலத்தில் பணியாற்றிய பின் ஒக்ரோபர் மாதம் 1542ஆம் ஆண்டு முத்துக்குளித்துறையில் மணப்பாறை என்னுமிடத்தில் தமது மறைபரப்புப் பணியை தமிழர் மத்தியில் ஆரம்பித்தார். இவர் கோவாவிலிருந்து அழைத்து வந்த இரு குருமாணவர்கள் இவருக்கு உதவியாளராகப் பணியாற்றியிருக்கின்றார்கள்.[9]

முத்துக்குளித்துறையில் மிகப்பயனுள்ள முறையில் பணியாற்ற தம்மைத் தயார்படுத்த இவர் செய்த முதல் விடயம் கத்தோலிக்கப்பாரம்பரியத்தில் மிக நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்த அடிப்படைச் செபங்களைச் சில மக்களின் துணையுடன் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்தமையாகும். பின்பு இவற்றை ஒலிப்பெயர்ப்பு முறையில் தம் சொந்த மொழியில் எழுதிக் கொண்டு முதலில் தாம் மனனம் செய்தார். மனனம் செய்த செபங்களைத் தாம் சொல்லச் சொல்ல மக்கள் அவற்றை மீண்டும் சொல்லச் செய்து அவற்றை மக்கள் மனனம் செய்ய உதவினார். இவ்வாறு அளித்த சிறிய அறிவுடன் கத்தோலிக்க மதத்தை தழுவிக் கொள்ள விருப்பக் கொண்ட மக்களுக்கு திருமுழுக்கு அளித்தார். மேலும் இவர் திருமுழுக்கு அளிக்கும் போது முழுக்கிராமத்திற்கோ அல்லது முழு மக்கள் குழுமத்திற்கோ பெரும் எண்ணிக்கையில் திருமுழுக்களித்தார் என அறியக்கிடக்கின்றது. இதனால் திருமுழுக்குப் பெற்ற மக்களுக்கு கிறிஸ்தவம் பற்றிய ஆழமான அறிவை இவரால் ஆரம்பகாலத்தில் அளிக்க முடியவில்லை. கத்தோலிக்க மதத்தின் பரம்பலில் நீண்ட காலமாக இவ்வாறு முழுக்கிராமமும் அல்லது, குழுமமும் திருமுழுக்குப் பெற்றிருந்தமையை வரலாற்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.[10] இவ்வாறான முறையையே பிரான்சிஸ் சவேரியாரும் கடைப்பிடித்திருக்கின்றார். எனினும் மதம்மாறியவர்களுக்கு மதம் பற்றி ஆழமான அறிவை அளிப்பதற்கு "கணக்கப்பிள்ளை"[11] என்று அழைக்கப்படும் உபதேசிமார்களை நியமித்து இவர்கள் மூலமாக மக்களுக்கு மறை அறிவு வழங்கப்பட்டது.

பிரான்சிஸ் சவேரியாரின் மறைபரப்புப் பணியினால் முத்துக்குளித்துறையில் பல கரையோரக் கிராமங்கள் கத்தோலிக்க மறையைத் தழுவியுள்ளன. இவ்வாறு கத்தோலிக்கத்தைத் தழுவிய கிராமங்களாக 30 கிராமங்கள் குறிப்பிடப்படுகின்றன. பிரான்சிஸ் சவேரியார் முத்துக்குளித் துறையில் பணியாற்றிய பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கத்தோலிக்க மறையில் இணைத்துக்கொண்டமை பற்றிய செய்தி மன்னார்-கரையாபட்டினம் என்னுமிடத்திலுள்ள மக்களுக்கு எட்டியது. பிரான்சிஸ் சவேரியார் புன்னைக்காயல் என்னுமிடத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கையில் இலங்கை, மன்னார் தீவில் கரையாப்பட்டினம்[12] என்னுமிடத்திலிருந்து அனுப்பப்பட்ட தூதுக்குழுவினர் முத்துக்குளித்துறையில் வேதாளையிலுள்ள[13]

தமது உறவினர்களுக்குத் திருமுழுக்கு அளித்தது போன்று மன்னார் வந்து தமக்கும் திருமுழுக்கு அளிக்கும்படி கேட்டுக் கொண்டனர்.[14] தென் இந்தியாவில் பல கிராமங்களிலிருந்தும் மக்கள் பிரான்சிஸ் சவேரியார் தமது கிராமங்களுக்கும் வந்து தமக்கும் திருமுழுக்கு அளிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். இவர்களில் மன்னாரிலிருந்து விடுக்கப்பட்ட அழைப்பு இலங்கைத் திருச்சபை வரலாற்றில் மறக்கமுடியாத வரலாற்றுப் பதிவுகளை ஏற்படுத்தி, இரத்தம் சிந்தி விசுவாச சாட்சியம் பகர்ந்த தியாகிகளை உருவாக்கியது டீயசவழடடை-ஆயககநடை என்னும் வரலாற்ற ஆசிரியர்கள் இந்நிகழ்விற்கு மிக உயர் மதிப்பளித்துத் தமது வரலாற்று நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.[15]

## மன்னாரில் கத்தோலிக்கம்

1544 ஆம் ஆண்டு மிகப்பெரிய தொகையில் மக்கள் கத்தோலிக்க மறையைத்தழுவிய ஆண்டாக வரலாற்று ஆசிரியர்கள் கணிக்கின்றனர். ஆவணி மாதம் 1544ஆம் ஆண்டு பிரான்சிஸ் சவேரியார் புன்னைக்காயல் என்னுமிடத்தில் மறை பரப்பி பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு திருமுழுக்கு அளித்துக்கொண்டிருந்த வேளையில், மன்னாரிலிருந்து விடுக்கப்பட்ட அழைப்பு சவேரியாரை எட்டியது. எனினும் விட்டு விலக முடியாத அளவிற்கு பிரான்சிஸ் சவேரியார் மறைபரப்புப் பணியில் முழுமையாக ஈடுபட்டிருந்த காரணத்தினால் அருட்சகோதரர் மன்சிலாஸ் என்பவரை மன்னார் அனுப்பத்தீர்மானித்தார்.[16] மன்னார், மாதோட்டம் யாழ்ப்பாண மன்னனின்[17] ஆட்சிக்குட்பட்டிருந்த காரணத்தினால், அதிகம் செல்வாக்குப் பெற்றிருந்த நாகப்பட்டினத்து மன்னனிடமிருந்த யாழ்ப்பாண மன்னனுக்கு சிபாரிசுக்கடிதம் பெற்றுச் செல்லும் படி அருட்சகோதரர் மன்சிலாஸ் என்பவருக்குக் கடிதம் எழுதியிருந்தார். மேலும் மன்சிலாஸ் பணியாற்றிய பகுதி வடுகரின் தாக்குதல்களுக்கு உட்பட்டிருந்தபடியால் இப்பகுதி வடுகரிடமிருந்து முற்றாக விடுக்கப்பட்ட பின்பு தமக்கு அறிவிக்கும்படியும் மன்சிலாஸ் இடத்திற்குத் தம்முடன் பணியாற்றும் பிரான்சிஸ் கொயெல்லோ என்பவரை அனுப்புவதாகவும் எழுதியிருந்தார். எனினும் பிரான்சிஸ் சவேரியார் அடிகளோ அல்லது அருட்சகோதரர் மன்சிலஸ் அவர்களோ மன்னார் சென்று மறை அறிவித்து திருமுழுக்கு அளிப்பதற்கு முத்துக்குளித்துறையில் நிலவிய பணியின்

பழுவும், பதட்டமான சூழலும் இடமளிக்கவில்லை,[21] இதற்கான காரணங்களை இங்கு நோக்கலாம்.

சவேரியார் அர்ப்பணம் நிறைந்த அயராது உழைப்பினால் முத்துக்குளித்துறையில் பல கிராமங்கள் கிறிஸ்தவ மறையைத்தழுவிக்கொண்டனர். இவர்களில் கொழும்புத்துறையில் வாழ்ந்த கரையார் சமுகத்தவர் முதன்மையானவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். மேலும் கீழக்கரை, பெரியபட்டினம், வேதாளை என்னுமிடங்களிலுள்ள மக்களுக்கும் சவேரியார் திருமுழுக்களித்து கத்தோலிக்க மறையில் இணைத்துக் கொண்டார்.[22]

இன்று கன்னியாங்குமரி என்று அழைக்கப்படும் பகுதி முன்னர் திருவாங்கூர் என்றே அழைக்கப்பட்டது. இப்பகுதியிலுள்ள கடலோரக்கிராமங்களிலுள்ளவர்களுக்கு சவேரியார் திருமுழுக்கு அளித்தார். திருவாங்கூர் மன்னன் மாத்தாண்டவர்மா, இதையண்டிய வேறொரு பகுதியை ஆண்ட இவன் சகோதரன் ராமவர்மா, ஆகிய இருவருக்கும் எதிராகப் பாண்டியர்கள் போர் தொடுத்தனர். இச்சூழ்நிலையில் கோவா மாநிலத்திலுள்ள போர்த்துக்கேய ஆளுனன் திருவாங்கூர் மன்னனுக்கும், அவன் சகோதரனுக்கும் உதவியளிக்க சவேரியார் மூலம் செய்தி அனுப்பினான். இச்செய்தி திருவாங்கூர் மன்னனுக்கு மட்டற்ற மகிழ்ச்சியளித்ததால் திருவாங்கூர் மாநிலத்தில் கிறிஸ்தவ மறையைப் பரப்ப சவேரியாருக்கு அனுமதி அளித்ததுடன், கிறிஸ்தவ ஆலயம் அமைப்பதற்கு ராமவர்மா மன்னன் பெருந்தொகைப் பணமும் வழங்கினான். சவேரியார் இச்சந்தர்ப்பத்தை தக்க முறையில் பயன்படுத்தி பத்தாயிரத்திற்கும் அதிகமான முக்குவர் குலத்தவருக்கு திருமுழுக்கு அளித்தார். இச்சம்பவம் 1544ஆம் ஆண்டு ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இடம்பெற்றது.[23]

வடுகர் பரதக்கிறிஸ்தவர்களுக்குப் பெரும் கொடுமை விளைவித்து துன்புறுத்திக் கொண்டிருந்த காரணத்தினால் இம் மக்களை இந்நிலையில் தவிக்க விட்டு மன்சிலஸ் அடிகள் பிரான்சிஸ் சவேரியார் வேண்டுகோளை ஏற்று மன்னார் செல்ல முடியவில்லை.[24] விஜய நகர மன்னனின் படையினர் வடுகர் என அழைக்கப்பட்டனர்.[25] இவர்களே கன்னியாங்குமரி வரை சென்று கிறிஸ்தவர்களைத்தாக்கி மக்களுக்குப் பல கொடுமைகளைப் புரிந்தனர். இச்சம்பவம் 1544ஆம் ஆண்டு யூன் மாத முற்பகுதியில் இடம்பெற்றது.[26] இன்னல்களுக்கு உட்பட்ட

மக்களுடன் கூடவே இருந்து பணியாற்ற வேண்டிய கட்டாய சூழ்நிலையை உணர்ந்த மன்சிலஸ், பிரான்சிஸ் சவேரியார் பணிப்பை ஏற்று மன்னார் செல்ல முடியாமைக்கு இதுவே காரணமாகும்.

## மறைசாட்சிய நிகழ்வு

1544ஆம் ஆண்டு ஐப்பசி, கார்த்திகை மாதப் பகுதிகளில் பிரான்சிஸ் சவேரியார் திருவாங்கூர் பகுதியில் திருமுழுக்கு அளித்து அவ்விடத்தைவிட்டு அகல முடியாத அளவிற்கு ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றிக்கொண்டிருந்தார். மன்சிலஸ் என்பவரும் வடுகரின் கொடுமையிலிருந்து புதிதாகக் கிறிஸ்தவத்தைத் தழுவிய பரவக்கிறிஸ்தவர்களைக் காக்க வேண்டிய ஒரு சிக்கலான சூழ்நிலையில் பணியாற்றிக்கொண்டிருந்தார்.

மன்சிலஸ் மன்னார் செல்ல முடியாமையை பிரான்சிஸ் சவேரியார் அறிந்ததும் வேறொரு பணியாளரை மன்னாருக்கு 1544ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் அனுப்பியிருந்தார், இங்கு பிரான்சிஸ் சவேரியார் தாம் அனுப்பிய பணியாளரைக் "Clergio"[27] என்றே குறிப்பிடுகின்றார். குவைறோஸ் என்னும் வரலாற்று ஆசிரியர் மன்னார் அனுப்பப்பட்டவரின் பெயரும் பிரான்சிஸ் சவேரியார் என்றே குறிப்பிடுகின்றார்.[28] மன்னார் அனுப்பப்பட்ட பணியாளர் அங்கு சென்று மிக ஆர்வத்துடனும், அர்ப்பணத்துடனும், கடின உழைப்புடனும் நற்செய்தியை அறிவித்து பெருந்தொகை[29] மக்களுக்கு திருமுழுக்கு அளித்து அவர்களைக் கத்தோலிக்க மறையில் இணைத்துக் கொண்டார்.

இவ்வாறு இந்தியாவின் தென் கரையோரத்திலிருந்து வந்த மறைபணியாளர் மன்னாரில் மிக ஆர்வமுடன் மறையைப்பரப்பி பெருந்தொகை மக்களுக்குத் திருமுழுக்கு அளித்து கத்தோலிக்க மறையில் இணைத்துக்கொண்டனர். என்னும் செய்தி சங்கிலி மன்னனுக்கு அறிவிக்கப்பட்டது. இச்செய்தியை...............சங்கிலி மன்னனுக்கு அறிவித்தவர்கள் இந்து சமயக் குருமார் என்று குறைறோஸ் என்னும் வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். குறைறோஸ் ஆசிரியர் இச்சம்பவம் பற்றி விபரிக்கும் போது இச்சம்பவம் பற்றி சங்கிலி மன்னனுக்கு அறிவிக்கப்பட்ட விதம் அவனைக் கடும் கோபத்திற்கும், தீவிரச்செயற்பாட்டிற்கும் தூண்டியதாகக் குறிப்பிடுகின்றார். மன்னார், மாதோட்டப்பகுதியில் பணியாற்றிய இந்து சமயக்

குருமார் சங்கிலி மன்னனிடம் முறையிடும்போது மன்னார் தீவில் பெரும் தொகை மக்கள் திருமுழுக்குப் பெற்று கத்தோலிக்க மதத்தைத் தழுவியதாகவும் மன்னன் உடனடியாகத் தீவிர நடவடிக்கை எடுக்கத் தவறின் மேலும் பலர் இவ்வாறு கத்தோலிக்க மதத்தை தழுவுவார்கள் என்றும் இதன் எதிர் விளைவாக மன்னன் இராச்சியமே அற்ற நிலைக்குத் தள்ளப்படுவான் எனவும் எச்சரித்தார். மேலும் மன்னாரில் இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு அவற்றிற்குப்பதிலாக வேற்றுத்தெய்வங்களை வழிபடும் நிலை காணப்படுவதாகவும் எடுத்துரைத்தனர்.[30]

## சங்கிலி மன்னன்

ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி மன்னார், மாதோட்டப்பகுதி யாழ்ப்பாண இராட்சியத்திற்குட்பட்டு சங்கிலி மன்னனின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. சங்கிலி மன்னன் மிகவும் கொடுமை நிறைந்த மன்னனாகவே இலங்கைத் திருச்சபை வரலாற்றாசிரியர் Barteli,[31] Maffei[32] என்பவர்கள் குறிப்பிட்டுள்ளனர்[33] சங்கிலி மன்னனின் கொடுமையையும், இரக்கமற்ற தன்மையையும் சுட்டிக்காட்டுவதாக அவனது அரண்மனையின் வாயிலில் பொருத்தப்பட்டிருந்த கொடிய பயங்கர கொலைக்கருவி குறிப்பிடப்படுகின்றது. அவனது எதிரிகள் அல்லது அவனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்வதற்காக குற்றம் சுமத்தப்படுவோர் கொடிய முறையில் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.[34] மேலும் இவன் தனது மூத்த சகோதரனிடமிருந்து அரசாட்சியைத் தான் அபகரித்தான் என்றும் தனது இரு மக்களை வாழுக்கு இரையாக்கினான் எனவும் அறியப்படுகின்றது.

மன்னார் தீவில் பெருந்தொகை மக்களின் மதமாற்றம் பற்றிய செய்தி சங்கிலி மன்னனுக்கு அறிவிக்கப்பட்ட போது பெரிதும் குழம்பி அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்தான். ஊடனடியாக யாழ்ப்பாணத்திலிருந்தும், மாதோட்ட பெருநிலப்பரப்பிலிருந்தும் 5000க்கும் அதிகமான படையினரைத் திரட்டிக்கொண்டு மன்னார் சென்று எதுவித எதிர்ப்பபின்றி தனது பழிவாங்கும் நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றினான். பெரியோர், சிறியோர், ஆண், பெண், வறியவர், செல்வர் என எந்த வித வேறுபாடுமின்றி அழுகுரலின் மத்தியிலும், பரதவிப்பின் மத்தியிலும் கொடூரமான முறையில் புதிய கிறிஸ்தவர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

## பட்டி அல்லது பட்டிம் - அமைவிடம் எது?

கென்றிக் கென்றிக்கஸ் அடிகள் எழுதிய இரண்டு கடிதங்களை ஆதாரமாகக்கொண்டு அன்ரனயினஸ் அடிகள் பட்டிம் அல்லது பட்டி என்னுமிடத்தின் சரியான அமைவிடம் பற்றித் தமது கணிப்பை முன்வைத்துள்ளார். 19ஆம் திகதி டிசம்பர் மாதம் 1561ஆம் ஆண்டு மன்னாரிலிருந்து கென்றிக் கென்றிக்கஸ் அடிகள் லெயினஸ் அடிகளுக்கு எழுதிய கடிதத்தின் வழியாக மன்னார் கோட்டையிலிருந்து[35] இரண்டேகால் மைல் தூரத்தில் பட்டி என்னும் கிராமம் அமைந்துள்ளது என அறியப்படுகின்றது.[36] "நாங்கள் இங்கு வருவதற்கு முன்பே இதே கிராமத்தைச் சேர்ந்த கரையார் சமுகத்தினர் இங்கே இருந்திருக்கிறனர். நாங்கள் இங்கு வந்த போது அவர்கள் இங்கு இருக்கவில்லை இப்பகுதியை ஆண்ட மன்னனின் கொடுமையே இதற்குக் காரணம்", என தொடர்ந்து அக்கடிதம் கூறுகின்றது.

கென்றிக்கஸ் அடிகள் மன்னாரில் மூன்று ஆண்டுகள் பணியாற்றிய பின் இங்கிருந்து இந்தியா சென்ற பின்பு, தூத்துக்குடியிலிருந்து 22ஆம் திகதி டிசம்பர் மாதம் 1564 இல் எழுதிய கடிதத்தில், மன்னார் தீவில் கரையார் சமூகத்தவர்களுக்கு இரண்டு கிராமங்கள் உண்டு என்றும் பெரிய கிராமம் சென்ற வருடம் கொள்ளை நோயினால் பாதிக்கப்படவில்லையென்றும் தாங்கள் புறப்படுவதற்கு முன்பே(இந்தியாவிற்கு) கரையார் சமூகத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் சிறிய கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.[37]

கென்றிக்கஸ் அடிகள் மன்னாரிலிருந்து 19ஆம் திகதி 1561ஆம் ஆண்டு எழுதிய கடிதத்திலிருந்து மன்னார் கோட்டை பற்றியும், பட்டி என்னும் இடம் பற்றியும் மேலும் சில தகவல்கள் பெறக்கூடியதாயுள்ளது. தென் இந்திய முத்துக்குளித் துறையிலிருந்து 1560ஆம் ஆண்டு முத்துக்குளிப்பதற்கு கிறிஸ்தவர்கள் மன்னார் தீவிற்கு வந்து குடியேறினார்கள். இவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு படைத் தலைவன் ஜோர்ஸ் டீ மேல்லோ கஸ்ரோ பொறுப்பில் 150 படைவீரரும் ஆறு கப்பல்களும் அனுப்பப்பட்டுள்ளன.[38]

படையினரும் படையினரின் ஆன்மீகத்தலைவரான ஜெறோமினோ வாஸ் அடிகளும் கோட்டையினுள்

வாழ்ந்திருக்கின்றார்கள். கோட்டையினுள் ஒரு ஆலயமும், ஒரு வைத்தியசாலையும் கட்டப்பட்டன" பட்டியில் ஒரு ஆலயம் நிறுவப்பட்டு, ஜெறோமினோ வாஸ் அடிகள் புதன் கிழமைகளில் இங்கு திருப்பலி ஒப்புக் கொடுத்து வந்திருக்கின்றார். கென்றிக்கஸ் அடிகள் வரைந்த இரண்டு கடிதங்களையும், மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் ஆய்வு நிலையில் நோக்கி பல தீர்க்கமான முடிவுகளை முன் வைக்கலாம்.

1. பட்டி என்னும் கிராமம் மன்னார் கோட்டையிலிருந்து இரண்டேகால் மைல் தொலைவில் அமைந்துள்ளது.
2. பட்டி தோட்டத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களே பிரான்சிஸ் சவேரியாரினால் அனுப்பப்பட்ட மறைப்பணியாளரினால் (derigl) முதலில் திருமுழுக்கு அளிக்கப்பட்டவர்கள்.
3. பட்டி, பட்டிம், பட்டித்தோட்டம், கரையாப்பட்டினம் அனைத்தும் ஒரே இடத்தைக் குறித்து நிற்பதோடு, இவ்விடம் மன்னார்க் கோட்டையிலிருந்து இரண்டேகால் மைல் தொலைவில் அமைந்துள்ளது.
4. கரையாப்பட்டினத்தில் வாழ்ந்த மக்களே பிரான்சிஸ் சவேரியாரிடம் தூது அனுப்பி தமது இடத்திற்கு வந்து தமக்குத் திருமுழுக்கு அளிக்கும் படி கேட்டுக் கொண்டனர்.
5. திருமுழுக்குப் பெற்றவர்களில் 600-700 வரையிலான தொகை மக்களை சங்கிலி மன்னனின் படையினர் கொடூரமாகக் கொண்டனர்.
6. இந்நிகழ்வு 1544ஆம் ஆண்டு நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் இடம் பெற்றுள்ளது.
7. கொல்லப்பட்டவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் பெரு நிலப்பரப்பிற்குத் தப்பிச் சென்று மீண்டும் 1560 ஆண்டு பட்டி தோட்டம் (சிறிய கிராமம்) என்னும் இடத்திற்கு வந்தனர்.
8. 1560 இற்குப் பின்பு மன்னார் தீவில் கரையார் சாரியினருக்கு பெரிய கிராமம், சிறிய கிராமம் என இரண்டு கிராமங்கள் இருந்திருக்கின்றன.

## பிரான்சிஸ் சவேரியார் அறிக்கை

மன்னார் மறைசாட்சிகள் கொடூரக் கொலைகள் பற்றிய நிகழ்வு கொச்சி என்னுமிடத்திலிருந்து பிரான்சிஸ் சவேரியார் உரோமாபுரியிலுள்ள தமது சபையைச் சார்ந்தவர்களுக்கு ஜனவரி,27, 1545 இல் வரைந்த மடலில் இருந்து பல முக்கிய

தகவல்களை அறியக் கூடியதாகவுள்ளது. இச்சம்பவம் பற்றிக் குறிப்பிடுகின்ற ஆவணங்களில் தற்போதுவரையும் கிடைத்துள்ள ஆவணங்களில் காலத்தால் முந்தியதாக இவ் ஆவணமே பேணப்படுகின்றது. தம்மை மன்னார் வந்து தமக்கு திருமுழுக்கு அளிக்கும்படி மன்னார் கரையாப்பட்டினம் வாழ் மக்கள் அனுப்பிய தூதுக்குழுவினர் தம்மிடம் கேட்டுக்கொண்டதாகவும் தாம் அங்கு செல்ல முடியாக அளவிற்கு திருவாங்கூரில் முக்குவக்குல மக்களுக்கு திருமுழுக்கு அளிக்கும் பணியில் ஈடுபாடு கொண்டிருந்ததாகவும் இதனால் தமது இடத்திற்கு வேறு குருவை அனுப்பியதாகவும் குறிப்பிடுகின்றார். மேலும் தம்மால் அனுப்பப்பட்ட குருவானவர் மன்னாரில் பலருக்கும் திருமுழுக்கு அளித்து பலரையும் மதம் மாற்றிய செய்தி அறிந்த இப்பகுதி (யாழ்ப்பாணம்) மன்னன் திருமுழுக்குப் பெற்ற அனேகமானோரைக் கொடுமையாகக் கொலை செய்த சம்பவம் பற்றியும் மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு மன்னாரில் புதிதாகக் கிறிஸ்தவ மறையைத் தழுவிய கிறிஸ்தவர்களை யாழ்ப்பாண மன்னன் கொடூரமாக கொலை செய்தான் என்னும் செய்தி பற்றி கோவாவில் நிலை கொண்டிருந்த இந்திய ஆளுனன் அறிந்த போது யாழ்ப்பாண மன்னனுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தான். கொச்சியின் மறைமாவட்ட குருமுதல்வரும் யாழ் மன்னனுக்க எதிராக மேற்கொள்ளப்படவிருந்த படையெடுப்பு நடவடிக்கையை முழுமையாக அதரித்ததுடன் இச்செயற்பாட்டை விரைவுபடுத்த பிரான்சிஸ் சவேரியார் இந்திய ஆளுனனை சந்திக்கும்படி கோரியிருந்தார். பிரான்சிஸ் சவேரியாரும் இந்திய ஆளுனனுடன் உரையாடி படை நடவடிக்கைக்கான கட்டளைக் கடிதங்களைப் பெற்றுக் கொச்சின் திரும்பியிருந்தார். எனினும் ீநபர என்னுமிடத்திலிருந்து வந்த போர்த்துக்கேயரின் வணககக்கப்பல் யாழ் கரையில் தரை கட்டியதால் அதிலிருந்து பெருந்தொகையான பெறுமதிமிக்க பொருட்களை யாழ் மன்னன் கைப்பற்றியிருந்தான். இந்நிலையில் அப்பொருட்களை மீண்டும் பெறும் பொருட்டு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த படையெடுப்பு பின்போடப்பட்டுள்ளது.

## மறைசாட்சிகள் எண்ணிக்கை

அ) மன்னார் மறை சாட்சியச் சம்பவம் பற்றிக்கூறும் ஆவணங்கள் அல்லது நூல்கள் மன்னாரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 600-700 என்றே

கூறுகின்றன. இந்த நிகழ்வு பற்றிக் குறிப்பிடும் பிரான்சிஸ் சவேரியார் யாழ்ப்பாண அரசன் பலரைக்[40] (P.54) கொன்றான் என்றே குறிப்பிடுகின்றார்.

ஆ) அந்திரே டீ சொய்சா என்பவர் கோவாவிலிருந்து போர்த்துக்கால் மன்னன் 3ஆம் யுவான் என்பவனுக்கு 15ஆம் திகதி நவம்பர் மாதம் 1545ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தில், யாழ்ப்பாண மன்னன் செய்த கொடுமைகள் அனைத்திற்கும் பெருங்கொடுமையாக 700க்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் மன்னாரில் கொல்லப்பட்டதைக் குறிப்பிடுகின்றார்.[41](P.114)

இ) இயேசு சபைக்குரு யுவான் டீ பெய்ரா என்பவன் கோவா மாநிலத்திலிருந்து, 20ஆம் திகதி நவம்பர் மாதம் 1545ஆம் ஆண்டு இயேசு சபையைச் சார்ந்த குரு மாட்டீன் டீ சாந்த குருஸ் என்பவருக்கு எழுதிய கடிதத்தில்(மன்னாரில்) கொல்லப்பட்டவர்கள் 700பேர் என்று குறிப்பிடுக்கின்றார்.[42](P.120)

ஈ) கோட்டை இராட்சியத்துக்குரிய அரசகுமாரன் டொன் யுவான் என்பவன் 15ஆம் திகதி நவம்பர் மாதம் 1545 இல் கோவாவில் இருந்து போர்த்துக்கால் மன்னன் 3ஆம் டொன் யுவான் என்பவனுக்கு எழுதிய மடலில், கொடுங்கோல் மன்னன் (சங்கிலி) 700[43] பேரைக் கொன்றதாகக் குறிப்பிட்டுள்ளான்; (P.107) நவம்பர் மாதம் 1545 இல் கற்ற இந்திய மக்கள் எழுதிய மடலின் கூற்றுப்படி மறைசாட்சியாக மரித்தவர் தொகை 600 எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.[44]

உ) பாட்டோலி, மேபி ஆகிய வரலாற்றாசிரியர்கள் ஹகருத்துப்படி திருமுழுக்குப் பெற்ற அனைவரும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டுள்ளனர்.[45]

ஊ) யாழ்ப்பாண வைபவ மாலை என்னும் நூல் இவ்விடயம் பற்றிக் குறிப்பிடும் போது 600 பேர் சங்கிலி மன்னனால் கொல்லப்பட்டதாக குறிப்பிடுகின்றது.[46] (P.59)

எ) யாழ்ப்பாண சரித்திரம் என்னும் நூல் இவ்விடயம் பற்றிக் குறிப்பிடும் போது 600 பேர் கத்தோலிக்க மறையைத் தழுவியதாகவும் அவர்கள் ஒவ்வொருவரும் கொல்லப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.[47](P.91)

ஏ) சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவது போன்று திருமுழுக்குப் பெற்ற எல்லாக் கிறிஸ்தவர்களும் சங்கிலி மன்னனின் படையினால் கொல்லப்பட்டார்கள் என்னும் கருத்து தவறானதாகும். 19ஆம் திகதி டிசம்பர் மாதம் 1561ஆம் ஆண்டு கென்றிக்கென்றிக்கஸ் அடிகள் லெயினஸ் என்னும் இயேசு சபை குருவுக்கு எழுதிய மடலில், தாம் மன்னார் தீவுக்கு வருவதற்கு முன்பு (இங்கு) மன்னார் தீவில் பட்டி என்னுமிடத்தில் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்றும், இப்பகுதியை ஆண்ட மன்னனின் கொடூரமான செயற்பாடுகளினால் இங்கிருந்து வேறு இடத்திற்குச் சென்ற மக்கள் 1560 இல் இயேசு சபைக்குருமார் மன்னார் தீவிற்கு வந்த போது மன்னாரை விட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் மன்னார் வந்தார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.[48]

## மறைசாட்சிகள் யார்?

மன்னார் மறைசாட்சிகள் பற்றிய வரலாறு கூறும் ஆவணங்களைச் சான்றாகக் கொண்டு இங்கு கொல்லப்பட்டவர்களின் தனிநபர்களின் பெயர்களோ அல்லது குழுத்தின் பெயர்களோ திட்டவட்டமாக கூறப்படமுடியாத நிலையே காணப்படுகின்றது. எனினும் குவைறோஸ் என்னும் வரலாற்று ஆசிரியர் கூற்றுப்படி மன்னாரில் மறைபரப்பி மக்களுக்குத் திருமுழுக்களித்த பிரான்சிஸ் சவேரியார் என்பவரும் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் என்று குறிப்பிட்டுள்ளார்.[49] எனினும் இது வரலாற்று ஆதாரமற்ற கூற்று என சூகாமர் என்னும் வரலாற்று ஆசிரியர் வன்மையாக மறுக்கின்றார்.[50]

மேலும் குவைறோஸ் என்னும் ஆசிரியர் கூற்றப்படி மன்னர் மாநிலத்தின் ஆளுநனாக சங்கிலி மன்னனின் (மகன்) பிரதிநிதியாக ஆட்சி செய்த இளம் சிங்கன் என்பவனும் மறைசாட்சியாக கொல்லப்பட்டான்.[51] மேலும் கலாநிதி போஞ்சன் அவர்களின் கருத்துப்படி விசுவாசத்திலும், கிறிஸ்தவ சமயச் செயற்பாட்டிலும் தீவிரமான முறையில் பங்கு கொண்டு ஏனைய கிறிஸ்தவர்களுக்கும் பெரும ஊக்குவிப்பு வழங்கியவராக விளங்கிய சாந்தக்குரூஸ் என்பவரும் மறைசாட்சியாக இறந்தார்.[52]

இதே கருத்தை ஆதரிப்பதாக சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்தும் அமைகின்றது. அதாவது மன்னார் பழைய சேமக்காலை சாந்தக்குரூஸ் சேமக்காலை என

அழைக்கப்பட்டதாகவும் சேமக்காலையிலுள்ள இடத்திலே சாந்தக்குரூஸ் என்பவரும் மறைசாட்சியாக கொல்லப்பட்டதாகவும் கூறுகின்றார்.[53] எனினும் வரலாற்றாசிரியர் சூகாமர் இக்கூற்றை மறுக்கின்றார். சூகாமர் கருத்துப்படி ஆசிரியர் குறைறோஸ் மன்னார் மறைசாட்சிகள் பற்றிக் கூறுகின்ற விடயம் முழுவதும் புனைவுத்தன்மை கொண்டதாகவும், சாந்தக்குரூஸ் பற்றிக் கூறப்படுகின்ற விடயமும் வரலாற்று ஆதாரமற்றதாயுள்ளதெனவும் கூறுகின்றார்.[54]

எனினும் மன்னார் மறைசாட்சிகள் பற்றிக் கூறப்படுகின்ற கர்ணபரம்பரைச் செய்திகளில் மன்னார் தீவு "சாந்தக்குரூஸ் தீவு" என்றும், சேமக்காலை சாந்தக்குரூஸ் செமக்காலையென்றும் அழைக்கப்பட்டுள்ளது.[55] Door Duperson - டோர் டுப்பேசன் என்பவர் வரைந்த மன்னார் தீவு வரைபடத்தில், மன்னார் தீவு ஐந்து பிரிவுகளாக வகுக்கப்பட்டு ஒரு பகுதி (St.Kores) சாந்த குரூஸ் என்னும் பிரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.[56]

மிக ஆர்வமுடனும் அர்ப்பணிப்புடனும் மறையறிவிப்புப் பணியைச் செய்ய மறைப்பணியாரும்(dergio) என்பவரும் இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டிருக்கலாம் என எண்ணுவது இயல்பானதே. இவ்வாறான கொடிய மரணம் நிகழும் போது மறையைப்பரப்பி பெருந்தொகை மக்களுக்குத் திருமுழுக்கு அளித்த மறைப்பணியாரும் (dergio) இறந்திருப்பார் என்று கருத்துக்கொள்வது மிகவும் பொருத்தமானதே.

மேற்குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் அனைத்தையும் ஆய்வு நிலையில் நோக்கும் போது, வரலாற்று ஆசிரியர் சூகாமர் முன்வைக்கும் கருத்தே கூடிய நம்பகத்தன்மையுள்ளதாகவும், விஞ்ஞான பூர்வமான முடிவாகவும் தென்படுகின்றது.

## மறைசாட்சியம் எப்போது நிகழ்ந்தது?

மறைசாட்சிய நிகழ்வு பற்றிக் கூறுகின்ற பல ஆவணங்கள் கிடைக்கப் பெற்றிருப்பினும், இதுவரையும் கிடைக்கப்பெற்ற பல ஆவணங்களைக் கொண்டு இந்நிகழ்வு இடம் பெற்ற சரியான நாளைக் கணிப்பிட முடியாதுள்ளது. எனினும் 1544ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கும் டிசம்பர் மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் மன்னார் மறைசாட்சிகளின் கொடிய மரண நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளது என்பதற்கு ஆவணங்கள் வழி

கூறக்கூடியதாயுள்ளது. 1544ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21ம் திகதி பிரான்சிஸ்சவேரியார், மன்சிலாஸ் என்பவரை மன்னார் அனுப்ப தீர்மானித்துள்ளார்.[57]

பிரான்சிஸ் சவேரியார் தாம் திருவாங்கூரில் முக்குவச் சமூகத்தினருக்கு திருமுழுக்கு அளிக்கும் பணியில் மிகத்தீவிரமாக ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தினால் தமது இடத்திற்கு மற்றொரு மறைப்பணியாளரை அனுப்பியதாகக் கூறுகின்றார். முக்குவச் சமூக மக்கள் திருமுழுக்குப் பெற்றது ஒக்டோபர் மாதம் 1544ஆம் ஆண்டிலாகும்.[58]

18ஆம் திகதி டிசம்பர் மாதம் 1544 இல் கொச்சின் என்னுமிடத்திலிருந்து பிரான்சிஸ் சவேரியார் அடிகள், மன்சிலாஸ் அடிகளுக்கு எழுதிய மடலில் மன்னார் மறை சாட்சிகளின் கொலைக்குக் காரணமாக விளங்கிய யாழ் மன்னன் தண்டிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடுகின்றார்.[59]

மேலும் கோட்டை இளவரசன் 3ஆம் டொன்யுவான் என்பவர் போர்த்துக்கால் மன்னன் 3ஆம் யுவான் என்பவருக்குக் கோவாவிலிருந்து 15ஆம் திகதி கார்த்திகை மாதம் 1545 இல் எழுதிய மடலில் எட்டு மாதங்களுக்கு முன்பு[60] சங்கிலி மன்னன் 700பேரைக் கொன்றதாகக் குறிப்பிடுகின்றார். இக்குறிப்பின்படி மன்னார் மறைசாட்சிகள் பற்றிய சம்பவம் இடம் பெற்றது பங்குனி மாதம் 1545 இல் ஆகும். இத்தகவல் முற்றாக தவறானதாகும்.

பிரான்சிஸ் சவேரியார் 27ஆம் திகதி தைமாதம் 1545 இல் உரோமையிலுள்ள தமது சபையினருக்கு எழுதிய கடிதத்தில் மன்னார் மறைசாட்சிகள் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.[61] இதே சம்பவத்தைப்பற்றி பிரான்சிஸ் சவேரியார் 18ஆம் திகதி டிசம்பர் மாதம் 1544 இல் மன்சிலஸ் அடிகளாருக்கு எழுதிய மடலிலும் குறிப்பிட்டுள்ளார்.[62]

யாழ்ப்பாண வைபவ மாலை என்னும் நூலில் இச்சம்பவம் பற்றிக் குறிப்பிட்டுள்ள வேளையில் இது இடம் பெற்ற காலம் குறிப்பிடப்படவில்லை எனினும் இந்நூலுக்கு ஆராட்சிக்குறிப்பு எழுதிய முதலியார் குலசபாநாதன் இச்சம்பவம் மார்கழி மாதம் 1544ஆம் ஆண்டு இடம் பெற்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.[63]

யாழ்ப்பாண சரித்திரம் என்னும் நூல் இச்சம்பவம் பற்றிக் குறிப்பிடும் போது இது மார்கழி மாத் 1544ஆம் ஆண்டு இடம் பெற்றதாக இதன் ஆசிரியர் முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[64]

மேற்குறிப்பிட்டுள்ள ஆவணங்களில் காணப்படும் தரவுகளிலிருந்து மன்னார் மறைசாட்சிகள் பற்றிய நிகழ்வு 1544ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கும் டிசம்பர் மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இடம் பெற்றுள்ளது. எனத் திட்டவட்டமாக குறிப்பிடலாம். இதனை மேலும் வரையறுத்துக் கூறுமிடத்து இது நவம்பர் மாதத்தில் பிற்பகுதியில் அல்லது டிசம்பர் மாதத்தின் முன்பகுதியில் இடம் பெற்றிருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு.

## கலாபனை நிகழ்ந்த இடம்

மன்னார் தீவில் கலாபனை நிகழ்ந்த இடம் பறிறி மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சில வரலாற்று ஆசிரியர்களின் கணிப்பின்படி "பட்டிம்" "பட்டிதோட்டம்" "கரையாப்பட்டினம்" "பட்டி" (இந்நான்கு சொற்பதங்களும் ஒரு இடத்தையே குறித்து நிற்கின்றன) என்னும் இடத்திலேயே கோரக்கொலைகள் நிகழ்ந்துள்ளன. எனினும் வேறுசில வரலாற்று ஆசிரியர்கள் கணிப்பின்படி தோட்ட வெளி என்னும் இடத்திலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மன்னார் மறைசாட்சிய சம்பவம் பற்றிக் குறிப்பிடும் ஆவணங்கள் கூறும் ஆதாரங்கள் துணை நின்றும், கர்ணபரம்பரை கூறும் செய்தி ஆதாரவழி நின்றும் இது பற்றி ஆய்வு செய்யலாம். இவ்விடயம் நிகழ்ந்த இடம் பற்றிக் குறிப்பிடும் ஏடுகளில் காலத்தால் முற்பட்டதாக இயேசு சபைக்குரு கென்றிக் கென்றிக்கஸ் 19ஆம் திகதி டிசம்பர் மாதம்1561ஆம் ஆண்டு எழுதிய மடல் காணப்படுகின்றது.[65] இம்மடலின் படி மறைசாட்சிகள் மரணம் நிகழ்ந்த இடம் மன்னார் கோட்டையிலிருந்து இரண்டேகால் மைல் தூரத்திலுள்ள "பட்டி"[66] என்னும் இடமே[67] கென்றிக் கென்றிக்கஸ் அடிகள் (1561-1564) ஆண்டுகளில் மன்னார் தீவில் தங்கியிருந்து பணியாற்றியவர் என்பதும், தமிழ் மொழியைக் கற்று தமிழில் பல கிறிஸ்தவ நூல்களையும், அகராதிகளையும் எழுதியவர் என்பது ஆய்வுப் புலத்தில் கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டியது.[68]

மேலும் இச்சம்பவம் பற்றிய வரலாற்றுப் பதிவுகளை விட்டுச் சென்ற வேறும் சில ஆசிரியர்கள் பற்றியும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது. இந்தியாவிலுள்ள இயேசு சபையினர் தரிசகராகப் (Vistitator) பணியாற்றியவரும், 1575இல் தமது இந்திய வருகையின் போது கன்னியாகுமரியில் இது விடயம் பற்றிக் கேட்டறிந்தவரும், 1583இல் வரலாறு எழுதியவருமான வலின்ஞானி என்பவர் இச்சம்பவம் நிகழ்ந்த இடம் "பட்டி" என்று குறிப்பிட்டுள்ளார்.[69]

1594 இல் இந்நிகழ்வு தொடர்பாக வரலாற்றுக் குறிப்பை விட்டுச் சென்ற தூர் செலியுனுஸ் என்பவர் இச்சம்பவம் பட்டிம் என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது எனக் கூறுகின்றார்.[70] லூசெனா என்பவர் தமது குறிப்பில் மன்னார் மறை சாட்சியச் சம்பவம் நிகழ்ந்தது பட்டிம் என்னும் இடத்தில் எனக்குறிப்பிட்டுள்ளார்.[71]

பிரான்சிஸ் சவேரியார் முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தப்பட சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்திற்கு சாட்சியமளிக்க மன்னாரிலிருந்து பன்னிருவர் இந்தியாவிற்கு 1616இல் அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ஒருவரான மனுவல் டீ தயிடா என்பவர் தாம் யுவாயோமெல்லோ சம்பாவோ என்னும் மன்னார் படைத்தலைவனிடமிருந்தும், கண்டி தளபதியிடமிருந்தும் இவர்களது நேரடி அனுபவவாயிலாக அறிந்த உண்மையைக் கேட்டறிந்ததாகக் கூறியுள்ளார். அதன்படி பட்டிம் என்னுமிடத்தில் அன்றாடம் 200முதல்300மக்கள் கொள்ளை நோயினால் தாக்கப்பட்டு இறந்து கொண்டிருந்த போது அங்கிருந்த 300இற்கும் அதிகமான மக்கள் பிரான்சிஸ் சவேரியாரிடம் உதவி வேண்டியுள்ளனர். பிரான்சிஸ் சவேரியார் அவர்களுக்காக வேண்டிய போது மூன்று நாட்களில் கொள்ளை நோயினால் பீடிக்கப்பட்ட அனைவரும் குணம் பெற்றதோடு, அவர்கள் அனைவரும் தமக்குத்திருமுழுக்கு அளிக்கும்படி பிரான்சிஸ் சவேரியாரிடம் கேட்டுக்கொண்டனர் எனச் சாட்சியம் பகர்ந்தார்.[72]

1653 இல் "ஆசியாவில் இயேசு சபையின் வரலாறு" என்னும் நூலை எழுதிய சேரியர் பாட்டோலி மறைசாட்சிய நிகழ்வு இடம்பெற்றது. "Pasim" பசிம் என்னும் இடத்தில் எனக் குறிப்பிட்டுள்ளார். இங்கு பட்டிம் என்பதையே தவறதவாக பசிம் என்று குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவு. மேலும் மன்னார் தீவை 'மறைசாட்சிகளின் தீவு" என அழைப்பது பொருத்தமானது

என்னும் கருத்தையும் இவர் முன்வைக்கின்றார்.[73] 1672 இல் வரலாறு எழுதிய கிறாசியா ஊயசயஉயை என்பவர் மறைசாட்சியச் சம்பவம் இடம் பெற்றது பட்டிம் என்னுமிடத்தில் எனக் கூறுகின்றார்.[74] இவ்வாறாக இச்சம்பவம் பற்றிக் குறிப்பிடும் பெரும்பான்மையான ஆவணங்கள் மறைசாட்சிய மரணம் பட்டிம் என்னும் இடத்திலேயே நடைபெற்றது எனக் கூறுகின்றன. வண எஸ் ஜி.பெரேரா,[75] வண. ஏ. ஜே. பி. அன்ரனயினஸ்[76] என்பவர்களும் இதே கருத்தையே ஆதரிக்கின்றனர். எனினும் 1644 இல் தமிழ் மாநில (மலபார் மாநில) மாகாணத்தலைவராக பணியாற்றிய லோபஸ் அடிகள் தோட்டவெளியிலிருந்து சபைமுதல்வருக்கு எழுதிய கடிதத்தில் "தோட்டவெளி" இல்லத்தின் பாதுகாவலர் புனிதர் சந்திரேசு ஆகும். இங்கு 430 கிறிஸ்தவர்கள் வாழ்கின்றார்கள். இக் கிறிஸ்தவர்களே புனித பிரான்சிஸ் சவேரியார் காலத்தில் முதல் திருமுழுக்குப் பெற்றவர்கள். இவர்களில் 600 பேர் மறைசாட்சிகளாகக் கொல்லப்பட்டனர். இவர்கள் சாட்சியத்தினால் இத்தீவு "மறைசாட்சிகளின் தீவு" என அழைக்கப்படுகின்றது. எனக்குறிப்பிட்டது இச்சம்பவம் தோட்டவெளியில் இடம் பெற்றிருக்கலாம் எனக் கணிப்பதற்கு வழி வகுக்கின்றத.[77]

மறைசாட்சிகள் மரணம் நிகழ்ந்த இடம் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் முன்வைத்த மேற்குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களை ஒப்பியல் ஆய்வு நிலையில் நோக்கும் போது பட்டிம் அல்லது பட்டித்தோட்டம் என அழைக்கப்படும் இடமே இந்நிகழ்வு இடம் பெற்றுள்ளதாகத் தோன்றுகின்றது.[78] ஏ.லோபஸ் என்பவரைத் தவிர்ந்த ஏனைய வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் பட்டிம் என்னுமிடத்தை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக அருட்தந்தை கென்றிக் கென்றிக்கஸ் முன்வைத்துள்ள கருத்து லோபஸ் முன்வைத்துள்ள கருத்தைவிட கூடிய நம்பகத் தன்மையும், ஏற்புத்தன்மையும் உள்ளடக்கியதாகக் கொள்ளப்பட வேண்டியுள்ளது. அருட்தந்தை கென்றிக் கென்றிக்கஸ் இச்சம்பவம் இடம் பெற்றது பதினேழு ஆண்டுகளின் பின்பு மன்னார் தீவு சென்று அங்கு மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து பணியாற்றியுள்ளார். இச்சம்பவத்தில் நேரடி அனுபவமுள்ள மக்களை தாமாகச் சந்தித்து அவர்களிடமிருந்து நேரடியான தகவலைப் பெற்றும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் எனக் கருத்துக் கொள்ள இடமுண்டு. மேலும் இச்சம்பவம் இடம் பெற்ற பின் முதலில் திருமுழுக்குப் பெற்ற மக்களில் கிலர் பெரும் நிலப்பரப்பிற்குத் தப்பிச் சென்றுள்ளனர்

என்றும், மீண்டும் இவர்கள் மன்னார் தீவுக்குத் திரும்பினர் என்றும் கென்றிக்கஸ் அடிகள் தமது மடலில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மக்கள் இச்சம்பவத்தின் பின்பு மன்னாருக்கு புதிதாக வந்த ஒரு குரவருக்கு இவ்விடயம் பற்றிக் கட்டாயம் விபரமாக எடுத்துக்கூறியிருப்பர் என்று கருத முடியும். மேலும் அருட்தந்தை லோபஸ் அடிகள் இச்சம்பவம் இடம் பெற்று நூறு ஆண்டுகளின் பின்பே மன்னார் தீவுக்கு வந்துள்ளார். எனவே இச்சம்பவத்துடன் தொடர்புள்ளவர்களை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பு கென்றிக்கஸ் அடிகளுக்கு கிடைத்தது போன்று லோபஸ் அடிகளுக்குக் கிடைக்க முடியாது என உறுதியாகக் கூறலாம். லோபஸ் அடிகள் மூன்றாம் நபர் மூலமாகவே இச்சம்பவம் பற்றிய செய்தியை அறிந்திருக்கலாம்.

லோபஸ் அடிகள் இவ்விடயம் தொடர்பாக கூறியகருத்துக்களை சற்று ஆழமாக நோக்கும் போது, இவ்விடயம் தோட்ட வெளியில் இடம் பெற்றதாக எந்த இடத்திலும் தெளிவாகக் குறிப்பிடவில்லை. தோட்டவெளியில் 1644 இல் வாழ்ந்த மக்களின் குழுமத்தைச் சார்ந்த மக்களே புனித பிரான்சிஸ் சவேரியார் காலத்தில் முதலில் மன்னார் தீவில் திருமுழுக்குப் பெற்றார்கள் என்பதையே கூறியுள்ளார். இச்சம்பவத்துடன் தொடர்புடைய மக்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளாரே தவிர இச்சம்பவம் நிகழ்ந்த இடம் பற்றிக் குறிப்பிடவில்லை லோபஸ் அடிகளின் இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டே சுவாமி ஞானப்பிரகாசர் இச்சம்பவம் தோட்ட வெளியில் இடம் பெற்றுள்ளது எனக் கூறியுள்ளார். எமது கணிப்பின் படி இச்சம்பவம் நிகழ்ந்த இடம் பட்டிம் என்று கொள்வதே பொருத்தமானதாகவுள்ளதென்பதை இச்சம்பவம் பற்றிக் கூறும் ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டு கூறக்கூடியதாயுள்ளது. போர்த்துக்கேய மொழியில் பட்டிம் என்று அழைக்கப்பட்டாலும் தமிழில் இது “பட்டி” என்றே அழைக்கப்பட்டிருக்கின்றது.

மறைசாட்சி மரணம் நிகழ்ந்தது பட்டி என்னும் இடத்திலா அல்லது தோட்ட வெளியிலா? இச்சிக்கலுக்கு வரலாற்று ஆசிரியர் கூகாமர் முன்வைக்கும் விளக்கம் பலராரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அறிவு சார் விளக்கமாகவே தென்படுகின்றது. பட்டி என்பது தோட்டவெளி என்னும் பங்கிலுள்ள ஒரு சிறிய இடமாகும். பரந்துபட்ட கருத்தில் இந்நிகழ்வு தோட்டவெளியில்

இடம் பெற்றது. அதாவது தோட்டவெளிப்பங்கில் இடம் பெற்றது எனக் குறிப்பிடுவது தவறாகாது. எனினும் இச்சம்பவம் இடம் பெற்றது பட்டி என மிக உறுதியாக சரியான இடத்தைக் குறிப்பிடுவது வரலாற்று நம்பகத்தன்மைக்கு வலுவூட்டுவதாக அமைகின்றது. இப்பின்னணியில் இச்சம்பவம் பட்டி என்னும் இடத்தில் இடம் பெற்றாலும், தோட்டவெளி எனக்குறிப்பிடுவது பரந்து பட்ட பொருளில் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும்.

## சுவாமி ஞானப்பிரகாசர் கருத்து

மன்னார் மறை சாட்சிகள் பற்றிய வரலாற்று நிகழ்வு இலங்கை வாழ் கத்தோலிக்க மக்களால் இன்றும் நன்றியுடனும் பெருமையுடனும் நினைவுகூரப்படும் வரலாற்றுச் சம்பவமாகும். இலங்கையில் கத்தோலிக்க விசுவாசத்திற்கு தம் உயிர்த்தியாகத்தினால் முதன் முதலில் சான்று பகர்ந்த இலங்கையர்கள் இவர்களேயாகும். இவ்வரலாற்று நிகழ்வு இலங்கையில் மிக வேகமாகவும், பெரும் எண்ணிக்கையிலான மக்களை உள்வாங்கியதாகவும் கத்தோலிக்க சமயம் பரம்பக் காரணமாகவும் அமைந்தது. போர்த்துக்கேயர் காலத்திலேயே எழுப்பப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான ஆலயங்கள் இதன் சிறந்த அடையாளச் சின்னங்களாகும். இவ்வாறு கத்தோலிக்க சமயம் விசுவாசத்தில் ஆழமும், உறுதியும் கொண்ட மதமாக வளர்வதற்கு மன்னார் மறை சாட்சிகளின் சாட்சிய வாழ்வும், செபமும் காரணமாயமைந்தன, என்னும் கூற்று ஆழமான அர்த்தம் கொண்டவையாகும்.

கத்தோலிக்கரின் விசுவாச சாட்சிய நிகழ்வு என்னும் நிலையில் இது பெருமைக்குரிய விடயமாக அமைந்தாலும் சில வரலாற்று, சமூக விடயங்களுடன் தொடர்புள்ள காரணத்தினால் இது தொடர்பாக சில விரும்பப்படாத வாதிப்பிரதி வாதங்கள் இடம் பெற்றுள்ளமையை நாம் மறுக்க முடியாது மறை சாட்சிகளாக இறந்தவர்கள் எந்தச் சாதியைச் சார்ந்தவர்கள் என்னும் சிக்கல் சுவாமி ஞானப்பிரகாசர், அருட்திரு யு.து.டீ. அன்ரனயினஸ் என்பவர்களுக்கிடையே கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. இங்கு இச் சிக்கலுக்குள் சென்று ஆய்வை முன்னெடுப்பது எமது நோக்கமல்ல. இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வாக இருப்பினும், இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவது இக்கட்டுரையின் நிறைவுக்கு

முன்வைக்கப்படும் ஒரு நிபந்தனையாகக் கொள்ளப்படலாம்.

மன்னார் மறை சாட்சிகளாக கொல்லப்பட்டவர்கள் கடையர் சமூகத்தினரே என சுவாமி ஞானப்பிரகாசர், வண. பேணியோலா என்பவர்கள் ஆய்வுமூலங்கள் ஆதாரவழிநின்று கணிப்பிட மறைசாட்சிகள் கரையார் சமூகத்தினரே என அன்ரனயினஸ் அடிகள், வண. எஸ். ஜி.பெரேரா என்பவர்கள் வரலாற்று ஆய்வுகளை வழிநின்று கருத்துக் கூறியுள்ளனர். சுவாமி ஞானப்பிரகாசர், வண. பேணியோலா அடிகள் கருத்தை ஆதரிக்க முன்வைக்கும் விளக்கங்களை இங்கே நோக்கலாம்.

1. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையிலும், இந்தியாவிலும் கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகள் தொடர்பாக இடம் பெற்ற சம்பவங்கள் போர்த்துக்கேய மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன.இவ்வாறு போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட ஆவணங்களில் கரையார், கடையர் என்னும் வேறுபாடு பேணப்படவில்லையென்பது சில வரலாற்று ஆசிரியர்கள் கருத்து, குறிப்பாக வண பேணியோலா, சுவாமி ஞானப்பிரகர்சர் என்பவர்கள் இக்கருத்தை முன்வைக்கின்றனர். வரலாற்று ஆசிரியர்கள் சுகாமர், ஞானப்பிரகாசர், பேணியோலா, என்பவர்கள் கூறும் விளக்கத்தின்படி போர்த்துக்கேய மொழியில் நுணிநா கன்னத்தைத் தொடுவதனால் எழும் மெய் எழுத்து ஒலிக்குரிய இடத்தில் "னு" என்னும் எழுத்து "ச"என்னும் எழுத்தினால் பிரதியீடு செய்யப்படுவது வழக்கமாகும். எனவே முயனநயச என்று குறிப்பிடவேண்டிய இடங்களிலும் ஊயசநயச என்றே குறிப்பிட்டுள்ளனர் என கடையர் சாதியினரே மறைசாட்சிய மரணத்தை மேற்கொண்டோர் என்னும் கருத்தை ஆதரிப்போர் விளக்கம் கூறுகின்றனர்.

2. கர்ணபரம்பரை கூறும் உறுதியான செய்தியிலிருந்து கடையர் சமூகத்தினரே மறைசாட்சிகளாக கொல்லப்பட்டனர் என்னும் எண்ணக்கரு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் மத்தியில் பேணப்படுகின்றது. இது விடயத்தில் கர்ணபரம்பரை கூறும் செய்தி வலுவான தாக்கமுடையதாகவே கொள்ளப்படுகின்றது. சைமன் காசிச் செட்டி அவர்கள் இது விடயமாக முன்வைக்கும் கணிப்பின்படி மன்னார் தீவு கடையர் சமூகத்தினருக்கே

உரியதாக விளங்கியதோடு, மறைசாட்சிகள் இச்சமூகத்தையே சார்ந்திருந்தனர்.

3. 1644ஆம் ஆண்டு லோபஸ் அடிகள் எழுதிய மடலின் ஆதாரத்தின் படி தோட்ட வெளியிலுள்ள சமூகத்தவர்களின் இனத்தவர்களே, அதாவது கடையார் இனத்தவர்களே மன்னார் மறை சாட்சிகளாகவே கொலை செய்யப்பட்டவர்கள்.

4. கடையார் சமூகத்தினர் மட்டுமே மறைசாட்சிகளாகக் கொலை செய்யப்பட்டவர்கள். அவர்கள் தமது சமூகத்தினரே எனக் காலாகாலமாக உரிமை பாராட்டிக் கொண்டும் வந்துள்ளனர். இச் சமூகத்தினர் நீண்டகாலமாக தூய ஆவியின் திருவிழாவை பெரு விழாவாகத், தமது சாதியினர் விழாவாகக் கொண்டாடி வருகின்றனர் அதாவது மறை சாட்சியச் சான்று பகர்வதற்குத் தமது மூதாதையருக்கு வேண்டிய ஆன்மீக வலுவை அளித்தவர் தூய ஆவியானவர் என்பதை நினைவுறுத்துவதாக இது அமைகின்றது.

5. மறைசாட்சிய மரணம் பற்றிக் குறிப்பிடுகின்ற போர்த்துக்கேயர் ஆட்சிக்கால ஆவணங்களில் இடம் பெறும் கரையாப்பட்டினம், கரையார் என்னும் பதங்கள் பற்றிய சிக்கல்கள் தோன்றவே செய்தது. சுவாமி ஞானப்பிரகாசர் இதற்கான விளக்கங்களை முன் வைக்கின்றார் "கரை" என்பது கரையோரம், கடலை அண்டிய பகுதி எனப் பொருள்படும். கரையை அண்டிய பகுதியில் வாழ்ந்த மக்கள் மீன் பிடித்தலைத் தமது தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். எனவே கரையோரங்களில் வாழ்ந்த மக்கள், மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த சாதியினர் அனைவரும் கரையார் என்றே அழைக்கப்பட்டனர். இப்பின்புலத்தில் நோக்கும் போது மன்னாரில் வாழ்ந்த கடையார் சமூகத்தினர் கரையோரத்தில் வாழ்ந்ததோடு, மீன்பிடித்தலைத் தொழிலாகக் கொண்டிருந்த காரணத்தினால், இவர்களும் கரையார் என்று அழைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். மேலும் கரையாபட்டினம் என்பது மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்ட அனைத்து சாதிகளின் பட்டினம் எனப் பொருள் கொள்கின்றார் சுவாமி ஞானப்பிரகாசர். மறைசாட்சியச் சம்பவம் நிகழும் போது கரையாபட்டினத்தில் ஒரு சாதியைச் சார்ந்த மக்கள் மட்டுமே இருந்திருக்கின்றார்கள். எனவே கரையார் என்னும் பதம்

குருகுலத்தார் என்பதைக் குறித்து நிற்கின்றது எனக் கொள்ளப்படவேண்டியதில்லை, ஏனெனில் குருகுலத்தார் மன்னாரில் குடியிருந்தார்கள் என்பதற்கான தடையங்கள் இல்லை, என்பது சுவாமி ஞானப்பிரகாசர் முன் வைக்கும் வாதம்.

6. வரலாற்று ஆசிரியர் சுகாமர் மன்னார் தீவில் இச்சம்பவம் நிகழ்ந்த இடம் கரையாபட்டினம் என்று அழைப்பதிலும் மேலாக கடையாபட்டினம் என்று அழைப்பதே பொருத்தமானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மறை சாட்சிகளாகக் கொல்லப்பட்டவர்கள் கடையார் சமுகத்தினரே என்னும் கருத்தினை ஆதரித்து வண.பேணியோவா அடிகள் முன் வைத்துள்ள காரணங்களையும் இங்கு நோக்குதல் பொருத்தமானது.

1. போர்த்துக்கேயர் காலத்து வரலாறு கூறும் ஆவணங்களின் படி மன்னாரிலுள்ள கரையார் சமுகத்தவர் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் கரையார் சமுகத்தினரிலிருந்து சமுக கௌரவ அங்கீகரிப்பு நிலையில் வேறுபட்டவர்கள். ஒரே சமுக கௌரவ அங்கீகரிப்பு நிலையில் இருந்திருந்தால் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும் கரையார் சமுகத்தினர் மறைசாட்சிகளாகக் கொல்லப்பட்டவர்களைத் தமது சமுகத்தவர்களாக உரிமை பாராட்டியிருப்பார்கள்.

2. எம்.டி. இராகவன் என்னும் சமுகவியலாளர் கருத்துப்படி இலங்கையிலுள்ள கரையார் சமுகத்தவர் தென் இந்தியாவிலிருந்து இராணுவப் பணிக்காகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு அழைத்துவரப்பட்டவர்கள். இக்கருத்தை ஏற்குமிடத்து இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள கரையார் சமுகத்தவர்க்கும், மன்னாரிலுள்ள கரையார் சமுகத்தவர்க்குமிடையே தொடர்பு காண்பது கடினமாகும். ஆனால் மன்னார் கரையார் சமுகத்தவர்களும், தென் இந்திய கரையார் சமுகத்தவர்களும் ஒரே இனத்தவர்களாகவே கொள்ளப்படுகின்றனர்.

3. மன்னாரில் உள்ளது போன்று தென் இந்தியாவிலும் கரையாபட்டினம் என்னும் இடமுண்டு. தென் இந்தியாவில் கடையர் பட்டினம் அல்லது கடையரின் இடம் என்பதே

போர்த்துக்கேய மொழியில் கரையாபட்டினம் என எழுதப்பட்டுள்ளது. மன்னாரிலும் கரையாபட்டினம் என்பதும் கடையாபட்டினம் என்றே கொள்ளப்பட வேண்டும் என்பது பேணியோலா அடிகளின் கருத்தாகும்.

4. பொதுவான சாதிகளின் அமைப்பில் கரையார் சாதியினருக்கு இந்தியாவில் அளிக்கப்படும் கௌரவம், இலங்கையில் கரையார் சாதியினருக்கு அளிக்கப்படும் கௌரவத்திலும் குறைவானதாகவே கொள்ளப்படுவதாக பேணியோலா அடிகள் கருதுகின்றார்.

## அன்ரனயினஸ் அடிகள் கருத்து

அன்ரனயினஸ் அடிகள் கரையார் சமூகத்தவரே மறைசாட்சிகளாக கொல்லப்பட்டனர் என்னும் கருத்தை வலியுறுத்த, சுவாமி ஞானப்பிரகாசர் கடையார் சமூகத்தினரே மறைசாட்சிகளாகக் கொல்லப்பட்டனர் என்பதை எடுத்துரைக்க முன்வைத்த காரணங்களை மறுத்து, அதற்கான விளக்கங்களை முன்வைத்துள்ளார்.

1. 21ஆம் திகதி ஆவணிமாதம் 1544ஆம் ஆண்டு முத்துக்குளித்துறை, புன்னைக்காயல் என்னுமிடத்திலிருந்து பிரான்சிஸ் சவேரியார் எழுதும் போது பட்டிம் என்னும் இடத்துக் கரையார் என்றே குறிப்பிட்டுள்ளார்.
2. கென்றிக்கென்றிக்கஸ் அடிகளின் மடல்களுக்கும், அம்மடல்கள் வழிபெற்ற கருத்துக்களுக்கும் அன்ரனயினஸ் அடிகள் அதிகம் சான்றாதாரத்தன்மை யும், நம்பகத்தன்மையும் கொண்டவையெனக் கருதுகின்றார். இந்நிலைப்பாட்டிற்குச் சில தாக்கமான காரணங்களையும் முன்வைத்துள்ளார். கென்றிக்கஸ் அடிகள் மன்னாரில் தங்கியிருந்து மூன்று ஆண்டுகள் (1562-1565) வரையும் மறைப்பணியாளராகவும், தமில் மொழியில் புலமைபெற்ற முதல் ஐரோப்பியராகவும், பல தமிழ் நூல்களையும், தமிழில் இலக்கண நூல்களையும் எழுதியவராகவும் குறிப்பிட்டுள்ளார். இலக்கண நூல்களையும் இவர் "கரையார்" சமூகத்தவர் என்றே குறிப்பிட்டுள்ளார். 19ஆம் திகதி 1561ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தில் பாலர், பள்ளிவிரியர், திமிலர் முக்குவர் என மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்ட பல சாதிகளைக் குறிப்பிட்டுள்ளார். இதனால் தாம் பணியாற்றும் இடத்திலுள்ள அனைத்து சாதியினரையும் நன்கு அறிந்திருந்தார் எனக் கொள்ள முடியும்.

3. ஆசிரியர் குவைறோஸ் சாதிகள் பற்றிக் குறிப்பிடும் போது வேடர்கள், முக்குவர்கள், கரையார், சாண்டார், சானியார், பள்ளர், சிகை அலங்காரம் செய்வோர் எனக் குறிப்பிட்டுள்ளார்.
4. குவைறோஸ் என்னும் வரலாற்று ஆசிரியர் மன்னார் கரையார், கரையாரின் சிற்றரசர்கள், கரையார் வழங்கிய மீன் பிடிவரி பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.
5. 70,000 கரையார் சாதியினர் கத்தோலிக்க மறையைத்தழுவிய விடயம் பற்றி போர்த்துக்கால் மன்னன் 3ஆம் டொன் யுவான் அளித்த போது "70,000 Hatiors of the carlas" கரையார் இனத்தவர் தங்கள் பட்டாங்கட்டிகளுடன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியமை பற்றி பெரிதும் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டுள்ளார்.
6. Abdre Funtado என்னும் போர்த்துக்கேய அதிகாரி 1591இல் மன்னார் வருகை தந்தபோது 6000 பரவர்களும், கரையாரும் அவரைப் பவனியாக வரவேற்றுள்ளனர்.
7. Rilociro என்னும் வரலாற்று ஆசிரியர் "Histaric Tragedy of Ceylon' என்னும் தமது நூலில் தமது காலத்தில் வாழ்ந்த சாதியினர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதில் கரையார் மீன் பிடிப்போர் எனக் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது.
8. அந்திரோ லோப்பஸ் என்பவர் 1644இல் எழுதிய மடலில் சாந்தோம் பட்டினம் (தற்போதைய எருக்கலம்பிட்டி) பற்றிக் குறிப்பிடும் போது "இந்த இடத்தில் வாழும் கரையார் சமூகத்தினர்" என்று குறிப்பிட்டுள்ளார். கரையார் சாதியினர் பற்றி ஆரம்பக்காலத்து எழுத்தாளர்கள் நன்கு அறிந்திருந்தனர் என்றும் பிற்காலத்தைய எழுத்தாளர்களே இந்த வேறுபாடுகள் பற்றி அறியாது 'ச' என்னும் இடத்தில் 'ன' என்னும் எழுத்தை எழுதியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஆரம்பக்காலத்த எழுத்தாளர்களான ஏ. வலக்ஞானி 1583, தூசெலியுனுஸ்1594, லூசெனா 1601, பட்டோலி 1653, கிறாசியா 1672, ஆகிய அனைவரும் பட்டி என்னும் இடத்திலேயே மறைசாட்சிய மரணம் இடம் பெற்றதென்றும், கரையார் சாதியினரே கொல்லப்பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர். சுவாமி ஞானப்பிரகாசர் கரையாப்பட்டினத்தில் ஒரு சமூகத்தினர் மட்டுமே இருந்துள்ளனர் எனக் குறிப்பிடுவதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் அனைத்தும் சுவாமி ஞானப்பிரகாசர் முன்வைத்துள்ள கடையார் சாதியினர் சார்பான கர்ணபரம்பரை என்னும் காரணத்தை ஏற்றுக் கொள்ள முடியாதவை என்பதனையே உறுதிப்படுத்துகின்றது, மேலும் கரையோரத்தில் வாழ்ந்தவர்கள் அனைவரையும் குறிக்கும் பொதுவான பதமாக "கரையார்" என்னும் பதம் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டதை அன்ரனயினஸ் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்.

கென்றிக் கென்றிக்கஸ் அடிகள் மேற்குறிப்பிட்ட தமது கடிதத்தில் மீன் பிடித்தலைத்தமது தொழிலாகக் கொண்ட சாதிகளாக பரவர், பள்ளிவிரியர், திமிலர் என்பவர்களை குறிப்பிட்டவர் கடையரையும் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பது அன்ரனயினஸ் அடிகளின் வாதம். மேலும் கடையர் சாதியினர் மீன் பிடித்தரைத் தொழிலாகக் கொண்டிருந்தார்கள் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. 1826ஆம் ஆண்டு புள்ளிவிபர அறிக்கையின் படி கடையார் சாதியினருக்குரியதாக இரண்டு வகைத் தொழில்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. சுண்ணாம்புக்கற்களை எரித்து சுண்ணாம்பு தயாரிப்போரும், சாயக்கிழங்கு தோண்டுவோரும். வலுவான கர்ணபரம்பரையாகப் பேணப்படும் காரணமானது, இதுவிடயம் பற்றிக்கூறுகின்ற ஆவணச் செய்திகளுடன் முரண்பட்டதாகத் தோன்றும் போது ஏற்றுக் கொள்ளமுடியாததாகும்.

தூய ஆவியின் விழாவை கடையர் சாதியினர் மிக நீண்ட காலமாகத் தமது சாதித் திரு விழாவாகவே கொண்டாடுகின்றார்கள் என்னும் கூற்று வழியாக முன்வைக்கப்படும் ஆதாரம் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது, ஏனெனில் இவ்விழாக்கள் கோவா ஒரற்ரோறியன் சபைக் குருமாராலேயே ஆரம்பிக்கப்பட்டவையாகும். 1622ஆம் ஆண்டு மன்னாரைத் தரிசித்த வண.ஙநசாழனந என்னும் குரு தமது மன்னார் வருகையின் போது இங்கு கொண்டாடப்பட்ட விழாக்கள் பற்றிக் குறிப்பிடும் போது நற்கருணைவிழா, திருச்சிலுவை விழா, புனித மத்தேயு, புனித லோறன்ஸ், புனிதஇஞ்ஞாசியார், வேதசாட்சிகள் என்னும் விழாக்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்கேய எழுத்தாளர்கள் "ஞ" என்னும் எழுத்த வரும் இடங்களில் அவற்றைப் பிரதி செய்வதாக "ச" என்னும் எழுத்தையே பயன் படுத்தியுள்ளார்கள என்னும் விளக்கத்தை அன்ரனயினஸ் அடிகள் மறுத்து, குறிப்பாக கென்றிக்கஸ்

அடிகள் இத்தவற்றை செய்திருக்கமாட்டார் என விளக்கம் கூறுகின்றார். தமிழில் இலக்கண நூலை எழுதியவர் இந்த வேறு பாட்டைப்பற்றிய குறிப்பை கவனத்திற் கொள்ள தவறியிருக்க மாட்டார்.

மேலும் போர்த்துக்கேய எழுத்தாளர்கள் 'ன' என்னும் எழுத்தை முற்றாகத் தவிர்த்தார்கள் என்று கூறுவதற்கில்லை. இதற்குப் பல எடுத்துக்காட்டுக்களை அன்ரனயினஸ் அடிகள் குறிப்பிட்டுள்ளார். மாதகல் என்பதற்கு Madagal, Bedas, Badagas, Carcas of Bedale, Verdade, Padeceo, Moraderes, Pardaos, Caderipai.Cardine, Cruzados, Paditeruypes, Passadoate, எனவே போர்த்துக்கேயர் கடையர் என்பதைக் குறிக்க முற்பட்டிருப்பின் Catjeas என்றாவது எழுதியிருக்கலாம்.

முன்னார் மறை சாட்சிகளாகக் கொல்லப்பட்டவர்கள் கடையார் சாதியினரே என்னும் கருத்தை வலியுறுத்துவதற்கு தாக்கமான காரணமாக கர்ணபரம்பரைச் செய்தியே முன்வைக்கப்படுவதுண்டு. எனினும் அன்ரனயினஸ் அடிகள் வலுவான மறுப்புக்காரணங்களைக் கூறுகின்றார். இக்கர்ண பரம்பரைச் செய்தியை முதலில் 1834ஆம் ஆண்டு சைமன் காசிச் செட்டி அவர்கள் ஆவணப்படுத்தினார். இதைப்பற்றி அவர் கூறும் போது மன்னார் விடயமாக ஆவணப்படுத்தப்பட்ட எந்த ஏடும் கிடைக்காத காரணத்தினால் அவ்விடத்து மக்கள் மத்தியில் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்த கர்ண பரம்பரைச் செய்திகளில் ஒன்றிலேயே தமது கருத்தை ஆதாரப்படுத்தியுள்ளார். வழிகளிலுள்ள பல கர்ணபரம்பரைச் செய்திகளில் ஒரு கர்ண பரம்பரைச் செய்தியின் படி கடையார் சாதியினர் மன்னார் தீவை பரம்பரையாகப் பேணியதோடு, இவர்கள் மட்டுமே இப்பகுதியில் வாழ்ந்திருக்கிறார்கள்.

இக்கோட்பாட்டின் படி இரு தொடர்பாக அநேகம் கர்ணபரம்பரைச் செய்திகள் வழக்கில் இருந்துள்ளன. இவற்றுள் ஒன்றையே சைமன் காசிச் செட்டி தெரிந்துள்ளார் 1826இல் எடுக்கப்பட்ட அரச புள்ளி விபர அறிக்கையில் 34சாதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | 1826 | 1886 |
|---|---|---|
| கரையார் | 1000 | 1040 |
| கடையார் (சுண்ணாம்பு எரிப்போர்) | 692 | 1134 |
| கடையார் (சோயா கிழங்கு தோண்டுவோர்) | 720 | 438 |

கர்ணபரம்பரை கூறும் செய்திகள் முழுமையான ஆதாரமற்றவை என்பதை நிருபிக்க கருதினால் நியூமன் அவர்களின் கூற்றிலிருந்து மேற்கோள்காட்டி அன்ரனயினஸ் விளக்குகின்றார். மேலும் அண்ணளவாக 400 வருடங்களுக்கு மேலாக கர்ணபரம்பரைச செய்திகளின் படி மறை சாட்சிய மரணம் தோட்டவெளியில் இடம் பெற்றதெனவும், யாழ்ப்பாண இளவரசன் தந்தையினால் (சங்கிலியன்) மறைசாட்சியாகக் கொல்லப்பட்டான். இது தொடர்பாகப் பல விடயங்கள் மூல ஆவணங்களிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டபின்பு மறை சாட்சிய நிகழ்வு 'பட்டி' என்னும் இடத்திலேயே இடம் பெற்றதென்றும், கோட்டை இளவரசனே கொல்லப்பட்டவன் என்பதும் ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்டன. இப்போது தோட்டவெளி, யாழ்ப்பாண இளவரசன் பற்றிய நீண்ட காலக் கர்ணபரம்பரைச் செய்திகள் தவறானவை என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறே மறை சாட்சிகள், கடையார் சாதியினர் பற்றய கர்ண பரம்பரைச் செய்தியும் உள்ளதென்பது அன்ரனயினஸ் அடிகளின் கருத்தாகும்.

இந்தியத்திருச்சபையின் வரலாற்று ஆசிரியர் 'Madura Catholic Mission, 1937edition, Page-34' என்றும் தமது நூலில் மறை சாட்சிகளாக கொல்லப்பட்டவர்கள் கரையார் சமூகத்தினரே எனக் குறிப்பிட்டுள்ளார்.

## முடிவுரை

போர்த்துக்கேயர் ஆட்சி இலங்கையில் நிலவிய போது, போர்த்துக்கால் நாட்டு மறைப்பரப்பு பணியாளர்கள் அதிக அர்ப்பணிப்போடு இலங்கையில் கத்தோலிக்க மறையைப் பரப்பினர். இக்காலத்திலேயே மன்னார் மறைசாட்சிகளின் சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவம் ஒரு வகையில் கத்தோலிக்க மறையின் பரம்பலுக்கு ஓர் பின்னடைவாக அமைந்தபோதும், மற்றோர் வகையில் இந்நிகழ்வின்போது உயிர்த்தியாகம் செய்து தம் விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்த மக்களின் எடுத்துக்காட்டான வாழ்வு ஏனைய மக்களும் விசுவாசத்திற்குச் சான்று பகரவும், மேலும் பல தியாகங்களை மேற்கொள்ளவும் காரணங்களாய மைந்தன. மேலும், போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் கத்தோலிக்க மறையைத் தழுவியோர் பதவிகளுக்காகவோ அல்லது வேறு சலுகைகளை எதிர் பார்த்தோ மதம் மாறவில்லை என்பதற்கு இந்நிகழ்வு சிறந்த

எடுத்துக்காட்டாகும். இந்நிகழ்வு புதிய கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியுடன் வாழ வழி வகுத்தது.

## அடிக்குறிப்புக்கள்

1. மறைசாட்சிகள் என்னும் பதம் இங்கு பரந்துபட்ட பொருளிலேயே பயன்படுத்தப்படுகின்றது. மேலும் திருச்சபையினால் அதிகாரபூர்வமாக இவர்கள் இதுவரை மறைசாட்சிகளாக அங்கீகரிக்கப்படவில்லை என்பதைக் கருத்திற்கொள்ளவும்.
2. A.M. Mundadan, *History of Christianity in India, vol-1, From the Begriming up to the middle of the sixteenth century,* Church History Association of India Bangalore, 1998,pp,392-93
3. எஸ். வெனான்சியுஸ். 'முத்துக்குளித்துறையில் கிறிஸ்தவ மறையின் வளர்ச்சி 1535-1929' மறை அருவி ஜனவரி-மார்ச் 1978, பக்.22,; See also, A. M Mundadan, pp.394-397.
4. "பத்துருவாதோ" (Padroado)பற்றிக்கூடிய விளக்கம் பெற Martin Quere, *Christianity in Sri Lanka under the Portuguese padroado 1597-1658*. எனும் நூலை பார்க்கவும்
5. லொயல்லா இஞ்ஞாசியார் 1491இல் ஸ்பெயின் நாட்டில் பிறந்தவர்.1539இல் இயேசு சபையை நிறுவி அதன் பொதுத்தலைவராக யூலை31, 1556வரையும் (மரணம்) பணியாற்றினார். ஏழு உறுப்பினர்களுடன் மட்டுமே இது ஆரம்பிக்கப்பட்டது. இச்சபை1540இல் திருத்தந்தை 2ம் பவுல் என்பவரால் துறவற சபையாக அங்கீகரிக்கப்பட்டது.
6. எஸ். வொனான்சியுஸ், பக்.23.
7. பிரான்சிஸ் சவேரியார் 1506ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் நவாறே என்னுமிடத்தில் பிறந்தார். இயேசு சபையை நிறுவுவதில் லொயல்லா இஞ்ஞாசியாருக்கு பெரும் துணையாக விளங்கினார். 1542இல் இந்தியாவிற்குப் புறப்பட்டு 1542இல் கோவா மாநிலத்தை அடைந்தார். இந்தியாவிலும். யப்பான் வரையிலான தூரகிழக்குப் பகுதியிலும் பணியாற்றி சீனா செல்லும் வழியில் சன்சியன் என்னும் தீவில் டிசம்பர் 3ஆம் திகதி 1552ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார். இவரது உடல் இன்றுவரையும் இந்தியாவில், கோவா என்னுமிடத்தில் அழிவுறாது பேணப்பட்டு வருகின்றது.
8. அருட்சகோதரர் மன்சிலஸ் 1542இல் பிரான்சிஸ் சவேரியாருடன் இந்தியாவிற்கு வந்தார். 1545ஆம் ஆண்டிலேயே குருவாகத்திருநிலைப்படுத்தப்பட்டார். எனினும் 1548இல் பிரான்சிஸ் சவேரியாரால் இயேசு சபையிலிருந்து நீக்கப்பட்டார், V. Perniola, *The Catholic Church in Sri Lanka, The Portugnese Period Vol-I, 1505-1565*, P.49.இது முதல் VPP I. V.Perniola அடிகள்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்து வரலாறு கூறும் ஆவணங்களை உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள ஆவணக் காப்பகங்களின்று திரட்டி ஆங்கில மொழியில் போர்த்துக்கேயர் காலம் பற்றி மூன்றும், ஒல்லாந்தர் காலம் பற்றி மூன்றும், ஆங்கிலேயர் காலம் பற்றி ஏழுமாக பதின்மூன்று தொகுதிகளை வெளியிட்டுள்ளனர். இதுமுதல் போர்த்துக்கேயர் காலத்து தொகுதிகள் I,II,III என்றே இங்கு குறிப்பிடப்படும்.

9. அ. சேவியர், "தமிழகத்தில் தலை சிறந்த கிறிஸ்தவ மறைப்பணியாளர்கள்", மறை அருவி ஏப்ரல்-ஜூன், 1987, பக்-1, இங்கு குறிப்பிடப்படும் இரண்டு குருமாணவர்களும் இம்மனுவேல், கஸ்பார் ஆகியவர்கள் என அறியப்படுகின்றது.
10. கா. சிவத்தம்பி "ஈழத்தின் கத்தோலிக்கத் தமிழிலக்கியப் பாரம்பரியம்", சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும், யாழ்ப்பாணம், 1981, பக்.23.
11. G. Schurhammer, *Francis Xavier, His life, His times, vol-II,* India, 1541-1545, Rome, 1977, pp.427-425.
12. *Ibid,* PP.347-353.
13. மன்னார் தீவில் கரையாப்பட்டினம் என்னும் இடத்தில் முதலில் திருமுழுக்குப்பெற்று, மறைசாட்சிகளாகக் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் முத்துக்குளித்துறையில் வேதாளை என்னும் இடத்திலுள்ள மக்களின் இனத்தவர்களாகும். வேதாளையிலுள்ளவர்கள் தாம் திருமுழுக்குப் பெற்று இச்செய்தியை மன்னாருக்கு அனுப்பினார்கள், இதன் பின்பே மன்னார் மக்கள் பிரான்சிஸ் சவேரியாருக்கு கோரிக்கை விடுத்து மன்னாருக்கு அழைத்தனர், G. Schurhammer, pp, 445,447.
14. VPP I, pp. 137 – Letter of Joao III to Pope Paul III, 19 February,1546.
15. பாட்டோலி, மேப்வி ஆகிய இருவரும் இயேசு சபையைச் சேர்ந்த குருக்கள் இருவரும் பிரான்சிஸ் சவேரியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள்: A.J. B. Antoninus, *The Martyrs of Mannar,* Colombo,1944, P, 45.
16. VPP I, PP.49-50. Letter of Francis Xavier to Francis Xavier from Punnaikayal,21 August, 1544.
17. சங்கிலி மன்னன் செகராசசேகரன் என்னும் சிங்காசனப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டான். (1519-1561) வரையும் யாழ்ப்பாண இராட்சியத்தை ஆண்டான் திருச்சபையின் வரலாறு கூறும் ஏடுகள் இவனை கொடிய மன்னனாகவே விபரித்துள்ளனர். மன்னார் மறைசாட்சிகளின் மரணத்திற்கு இவனே பொறுப்பானவன்.
18. *Ibid.*
19. பிரான்சிஸ் கொயல்ஹோ என்பவர் இந்திய நாட்டை சேர்ந்த குருவாகும்

20. *Ibid.,*
21. G. Schurhammer, p.460.
22. G.Schurhammer, p.347; m. Nrtpah;, "தமிழகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ மறைப்பணியாளர்கள்", மறையருவி, ஏப்ரல்-ஜூன் 1987, பக், 02.
23. G. Schurhammer, pp. 463-475.
24. A J.B. Antoninus,p.3; .S. Gnanapragasar, *A history of the Catholic Church in Ceylon, Period of beginnings, 1505-1602, Colombo,* 1924, p.40.
25. VPP l, p.49.
26. G. Schurhammer, pp.439-449.
27. Letter of Francis Xavier to the Brothren in Rome, Cochin, 27 January 1545,VPP I, p.53. பிரான்சிஸ் சவேரியார் மன்னாருக்கு அனுப்பிய மறைபணியானரைக் குறிப்பிடுவதற்கு போர்த்துக்கேய மொழியில் "derigo" என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஆங்கிலத்தில் Clergy என்று அழைக்கப்படுகின்றது. இப்பதம் திருநிலைப்படுத்தப்பட்ட குருவை அல்லது திருத்தொண்டரை குறிக்கும். குருத்துவத்திற்கு தம்மைத் தயார்படுத்தும் மாணவரையும் இப்பதம் குறிப்பதுண்டு. சில வரலாற்று ஆசிரியர்கள் கருத்துப்படி பிரான்சிஸ் சவோரியார் ஒரு திருத்தொண்டரை மன்னார் அனுப்பியிருந்தார் ஆனால் குவைறோஸ் (பக்,242) என்னும் ஆசிரியர் மன்னார் அனுப்பப்பட்டது பிரான்சிஸ் சவேரியார் என்னும் குரு எனக் குறிப்பிட்டுள்ளார். இந்திய மறைப் பணித்தளத்திலுள்ள கற்றவர்கள் கருத்துப்படி பிரான்சிஸ் சவேரியார் ஒரு குருவையே மன்னாருக்கு அனுப்பியுள்ளார். இவ்விடயத்தை இந்திய மறைபணித்தளத்திலுள்ள கற்றவர்கள் மிக்குவல் வாஸ் கொட்டினோ (Miguel Vaz Ciytubgi) என்பவரிடமிருந்து அறிந்து கொண்டனர். இவர் இச்செய்தியை பிரான்சிஸ் சவேரியாரிடமிருந்து அறிந்து கொண்டார். (VPP I, Doc54.2) போர்த்துக்கல் மன்னன் டொன் யுவான் திருத்தந்தை 3ஆம் பவுல் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் இருந்து பிரான்சிஸ் சவேரியார் மன்னாருக்கு ஒரு குருவையே அனுப்பினார் என அறிய முடிகிறது.(VPP I,doc,61-1) இயேசு சபை நிறுவியவர் லொயலா இஞ்ஞாசியாரின் செயலர் அருட்திரு பொலன்கோ என்பவர் குறிப்புக்களிலிருந்து பிரான்சிஸ் சவேரியார் மன்னாருக்கு ஒரு குருவையே அனுப்பியுள்ளார். இலங்கைத் திருச்சபை வரலாற்று ஆசிரியர் அருட்திரு பேணியோலா அவர்களின் கருத்துப்படி சவேரியார் மன்னாருக்கு அனுப்பிய குருவின் பெயர் யுவான் டீ லிஸ்சான்னோ. (Juan de Lizano)
28. Queyros, Fernaode, *The Spiritual and Temporal Conguest of Ceylon,* Translated by qS.G. Perera, Colombo, 1930, p.242.

குவைறோஸ் அடிகள் போர்த்துக்கல் நாட்டில 1617இல் பிறந்து , 1631இல் இயேசு சபையில் இணைந்து 1635இல் இந்தியாவில் உள்ள கோவா மானிலத்திற்கு வந்தார். 1688இல் இறைபதம் அடையும் வரையும், 53ஆண்டுகள் இந்தியாவில் தொடர்ச்சியாகப் பணியாற்றியுள்ளார். இதில் (1677-1680) ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியில் இந்தியாவிலுள்ள இயேசுசபைக் குருமாருக்குத் தலைவ்ராகப் பணியாற்றினார். இவரது பணிகளில் பெரும் பங்களிப்பாயுள்ளது, போர்த்துக்கேய மொழியில் எழுதிய The Spiritnal and Temporal Conquest of Ceylon என்னும் நூலாகும். ஆசிரியர் குவைறோஸ் 1612ஆம் ஆண்டுவரையிலுமான தமது நூலுக்கான விடயப் பொருளில் பெரும் பகுதியை இலங்கையில் பணியாற்றிய Friar Francisco Negano என்பவரிடமிருந்தும், இலங்கைபற்றி அறிந்து ஏனையவர்களிடமிருந்தும் பெற்றுள்ளார். (Queyros, p.14)

29. யாழ்ப்பாண மன்னனால் கொலைசெய்யப்பட்ட மக்கள் எண்ணிக்கை அண்ணளவாக 600-700 வரையும் என மதிப்பிடப்படுகின்றது. ஏனையோர் பயத்தினால் பெருநிலப்பரப்பிற்குச் சென்றுள்ளனர். இதனால் திருமுழுக்கு அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1000 ஆக இருக்கலாம் என சூகாமர் கணிக்கின்றாா;. Schurhammer, p.460.

30. *Ibid,* pp.240-244. மன்னார் மறைசாட்சிகள் பற்றிய சம்பவத்தை வரலாற்று ஆசிரியர் குவைறோஸ் விபரிப்பது மிகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், புனைவுத்தன்மை அதிகம் காணப்படுவதாகவும் வரலாற்று ஆசிரியர் சூகாமர் கருதுகின்றார்.

31. டானியல் பாட்டோலி (Daniel Bartoli) 1608இல் பிறந்து, 1623இல் இயேசு சபையில் இணைந்து கொண்ட இவர் மறையுரையாற்றுவதில் வியத்தகு திறமை பெற்றிருந்தார். இவர் 1650இல் சபை அதிகாரிகளால் உரோமாபுரிக்கு அழைக்கப்பட்டு ஆசியாவில் இயேசு சபையினர் வரலாற்றைக் கூறும் நூலை எழுதும் படி சபைத்தலைவர்களால் பணிக்கப்பட்டார். பாட்டோலி அவர்கள் இயேசு சபையினர் ஆசிரியவரலாறு என்னும் பொருளில் மூன்று தொகுதிகளாக நூல்களை வெளியிட்டார். இவற்றில் முதலாம் தொகுதியில் பிரான்சிஸ் சவேரியார் பணி, இலங்கை பற்றிய விடயங்கள் இடம் பெறுகின்றன.

32. யோண் பீற்றர் மாபி (John Peter Maffei) 1535இல் பிறந்து, 1565இல் இயேசு சபையில் இணைந்து கொண்டார். கருதினால் அவிகோ (Avigo) என்பவரால் லிஸ்பன் நகருக்கு அழைக்கப்பட்டு மூல ஆவணங்களிலிருந்து இந்தியாவில் போர்த்துக்கேயரின் ஆட்சி பற்றிய வரலாற்றை எழுதும் படி பணிக்கப்பட்டார். மாபி தமது நூலை இலத்தீன் மொழியில் எழுதினார். பாட்டோலி, மாபி ஆகிய இருவரின்

மேற்குறிப்பிட்ட இரு நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு (Faber)பேபர் அடிகள் ஆங்கில் மொழியில் தொருத்துள்ளார்.

33. A. J. B. Antoninus, p.48.
34. *Ibid.*,
35. மன்னார் கோட்டை 1580ஆம் ஆண்டு போர்த்துக்கேயரால் கட்டப்பட்டது. இதே கோட்டை 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட பின்பு, மேலும் பலப்படுத்தப்பட்டதென வரலாற்று ஆசிரியர் எமேசன் ரென்னன்ற கூறுகின்றார். இக்கோட்டை மிக் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பெரு நிலப்பரப்பையும், மன்னார் தீவையும் இணைக்கும் வீதிவழி மன்னார்த் தீவினுள் நுழையும் போது இக்கோட்டை நுழைவாயிலின் வலப்புறமாக அமைந்துள்ளது.
36. தோட்ட வெளிப்பாங்கின் ஒரு சிறிய பகுதியே கரையாப்பட்டினம் அல்லது பட்டி அல்லது பட்டிக்காடு என அழைக்கப்பட்டது. மன்னார் மறை சாட்சிகளின் சம்பவம் இடம் பெற்ற பின்பு தப்பிய மக்கள் பட்டித் தோட்டத்தை விட்டு வெளியேறி பெரு நிலப்பரப்பில குடியேறி வாழ்ந்தார்கள். 1561இல் கென்றிக்கஸ் அடிகள் மன்னார் தீவிற்கு வந்த போது ஏற்கனவே பட்டித்தோட்டத்திலிருந்து வெளியேறி பெருநிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் மீண்டும் பட்டி தோட்டத்திற்கு வந்த போது அப்பகுதி பெரும் பத்தைகளர்க வளர்ந்து காடு போன்று காட்சியளித்தது. இதனால் இப்பகுதி பட்டிக்காடு என அழைக்கப்பட்டது. (Schurhammer,P.448).
37. VPP I,doc-152.8
38. A.J.B.Antoninus , p.44.
39. VPP I, doc-152.1.
40. VPP I, doc-28.1.
41. VPP I, doc-48.6.
42. VPP I, doc-51.2.
43. VPP I, doc-46.6.
44. VPP I, doc-54.1.
45. D. Bartoli and J.P. Maffei, *The life of at Francis Xavier*, PP.78-79 as Quarter lay A.J.B.Antoninus P.45.
46. மயில்வாகனப்புலவர், யாழ்ப்பாண வைபவமாலை, மூன்றாம் பதிப்பு, 1995, பக்.59: "யாழ்ப்பாண வைபவ மாலை" என்னும் வரலாறு கூறும் நூல் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் ஒல்லாந்த ஆளுநர்(Jahn Maccara) யான் மக்காரா என்பவரின் பணியின் பேரில் 1736ஆம் ஆண்டு மாதகல் மயில்வாகனப்புலவரால் வசன நடையில் எழுதப்பட்டது. இதன் முதல் பதிப்பு 1884ஆம் ஆண்டு சென்னையில் வெளியிடப்பட்டது. 1949இல் இரண்டாம் பதிப்பு முதலியார் குலசபாநாதன் அவர்களின் ஆராய்ச்சிக் குறிப்புடன் வெளிவந்தது.

1953ஆம் ஆண்டு 3ஆம் பதிப்பும், 1995ஆம் ஆண்டு நான்காவது பதிப்பும் வெளியாயின. மன்னார் மறைசாட்சிகள் பற்றிக்கூறும் சுதேச இலக்கியங்களில் காலத்தால் முன் தோன்றியது இதுவாகும்.

47. செ. இராசநாயகம், யாழ்ப்பாணச்சரித்திரம், டெல்கி, 1986, பக்.91.
48. VPP I, doc-152.8; Schurhammer , P. 472.
49. Queyros,p.243.
50. Schurhammer, p.471-472.
51. A,J.B. Antoninus, p.8.
52. *Ibid.*இகருத்துப்படி இக்கூற்று ஆதாரமற்ற புனைவுத் தன்மை கொண்டதாகும்.
53. S. Gnanapragasam, p.45.
54. Schruhammer, P.471-472
55. A.J.B.Antoninus. P.9
56. *Ibid.*,
57. VPP I, doc-25.1
58. A.J.B.Antorninus.p,28
59. VPP I,doc-26.1
60. VPP I,doc-46.6
61. VPP I,doc-28.1
62. VPP I ,doc-26.1
63. மயில்வாகனப் புலவர், பக்.59.
64. செ. இராசநாயகம், பக்.91.
65. VPP I, doc-152.8.
66. கென்றிக் கென்றிக்கஸ் அடிகள் மறை சாட்சிய மரணம் நிகழ்ந்த இடத்தை "பட்டி" என்றே எப்பொழுதும் குறிப்பிட்டுள்ளார். ஏனைய எந்தவொரு போர்த்துக்கே ஆசிரியரும் பட்டி எனக் குறிப்பிடவில்லை. அநேகர் "பட்டிம்" என்றே குறிப்பிட்டிருக்கின்றனர்.
67. *Ibid.*,
68. *Ibid.*,doc- 152.21
69. A.J.B.Antorninus .p.10
70. *Ibid.*,
71. *Ibid.*,
72. *Ibid.*,
73. *Ibid.*, p.11
74. *Ibid.*,
75. *Ibid.*,pp.11-12
76. *Ibid.*,pp.10-12
77. *Ibid.*,pp.11-12

78. அருட்திரு. A.J.B.அன்ரனயினஸ் அடிகள் மன்னார் கோட்டையிலிருந்து இரண்டேகால் மைல் தூரத்திலுள்ள பட்டித் தோட்டத்தை பட்டித்தரவை எனக் குறிப்பிட்டு, இவ்விடத்தில் தாம் 1944இல் மேற்கொண்ட அகழ்வாராட்சி பற்றி, 1952இல் வரலாற்று ஆசிரியர் சூகாமர் என்பவருக்கு எழுதியிருக்கின்றார் அதன்படி இப்பகுதியில் அழிவுற்ற நிலையிலிருந்த ஒரு ஆலயத்தின் உள் அகழ்வின் போது ஆறு எலும்புக்கூடுகள் வெவ்வேறு நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனினும் அன்ரனயினஸ் அடிகளுக்கு ஏற்பட்ட இடமாற்றத்தின் காரணத்தினால் அவர் அகழ்வுப்பணியைத் தொடர முடியவில்லை. (Schurhammer,P.472)

## உசாத்துணை நூல்கள்


1. A.M. Mundadan, *History of Christianity in India, vol-1, From the Beginning up to the middle of the sixteenth century,* Church History Association of India Bangalore, 1998.
2. எஸ். வெனான்சியுஸ். 'முத்துக்குளித்துறையில் கிறிஸ்தவ மறையின் வளர்ச்சி 1535-1929' *மறை அருவி*, ஜனவரி-மார்ச் 1978.
3. அ. சேவியர், "தமிழகத்தில் தலை சிறந்த கிறிஸ்தவ மறைப்பணியாளர்கள்", *மறை அருவி*, ஏப்ரல்-ஜூன், 1987.
4. கா. சிவத்தம்பி "ஈழத்தின் கத்தோலிக்கத் தமிழிலக்கியப் பாரம்பரியம்", *சுவாமி ஞானப்பிரகாசர் சிந்தனையும் பணியும்,* யாழ்ப்பாணம், 1981.
5. G. Schurhammer, *Francis Xavier, His life, His times, vol-II, India, 1541-1545,* Rome, 1977.
6. A.J. B. Antoninus, *The Martyrs of Mannar,* Colombo, 1944.
7. S. Gnanapragasar, *A history of the Catholic Church in Ceylon, Period of beginnings, 1505-1602,* Colombo, 1924.
8. Queyros, Fernao de, *The Spiritual and Temporal Conguest of Ceylon,* Translated by S.G. Perera, Colombo, 1930.
9. செ. இராசநாயகம், *யாழ்ப்பாணச்சரித்திரம்*, டெல்கி, 1986.
10. V. Perniola, *The Catholic Church in Sri Lanka, The Portugnese Period Vol-I, 1505-1565,* Tisara praksakayo Ltd., Dehiwala, 1989.
11. Martin Quere, *Christianity in Sri Lanka under the Portuguese padroado 1597-1658*, Catholic press, Colombo,1995.

ISBN: 978-955-96653-2-8